இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 67 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 29 – திங்கள்கிழமை 16 அக்டோபர் 2023 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 67 : Thiruvalluvar Year - 2054 - Purattasi 29 - Monday 16 October 2023 - Madurai 16 Pages ₹ 5.00


## மகளிர் முன்னேற்றத்தில்

# இந்தியாவிற்கே தமிழ்நாடு வழிகாட்டி!

## மகளிர் உரிமை மாநாட்டில் காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி. சோனியா காந்தி புகழாரம்!

**சென்னை, அக்.16-**

**சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நேற்று முன்தினம் மாலை மகளிர் உரிமை மாநாடு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர் திருமதி. சோனியாந்தி அவர்கள் சிறப்புரையாற்றுகையில் மகளிர் முன்னேற்றத்தில் இந்தியாவிற்கே வழிகாட்டி யாக தமிழ்நாடு உள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்தத் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களே, அன்பிற்குரிய கனிமொழி அவர்களே, மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய மகளிர் தலைவர்களே,

இந்த அருமையான நாளில் ஒரு மாபெரும் தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படுகின்ற, இந்த மகளிர் உரிமை மாநாட்டிற்கு என்னை அழைத்த முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தன்னுடைய வாழ்க்கை முழுமையும் ஏழை எளிய மக்களுக்காக உழைத்தவரும், இந்தியத் தாயினுடைய தவப்புதல்வர்களில் ஒருவரும், நம்மால் அன்போடு கலைஞர் என்று அழைக்கப்படக் கூடியவருமான அருமைக்குரியத் தலைவர் கலைஞர் அவர்கள், ஒரு பன்முகத்தன்மை கொண்ட ஒரு மாபெரும் தலைவர். ஒரு எழுத்தாளராக, ஒரு பத்திரிகையாளராக, ஒரு முதலமைச்சராக, ஒரு நிர்வாகியாக அவர் ஆற்றியப்பணிகள் மகத்தானப் பணிகள்.

மாநிலம், மொழி, சாதி, மத நம்பிக்கை இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு, எல்லோரையும்



சமத்துவமாக பார்க்கக்கூடிய ஒரு அருமையான தத்துவத்திலே அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

தன்னுடைய வாழ்நாளின்போது அதிகமாக பேசப்படாத பாலின சமத்துவத்தை அவர் சிந்தித்து அதற்காக போராடுகின்ற ஒரு போராளியாக தன்னை அடையாளப்படுத்திக்கொண்டார். இன்று அது ஒரு தேசிய இயக்கமாக கொண்டாடப் படுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

நம்முடைய பெண்கள் இந்தியாவிலேயே மகத்தான சாதனை செய்திருக்கிறார்கள். மரபுவழி சமூகம், ஆணாதிக்க சமூகம், கலாச்சாரம் என்கின்ற தடைகளையெல்லாம் மீறி அவர்கள் மிக அருமையான சாதனைகளை செய்து முடித்து இருக்கிறார்கள்.

**பெண்கள் ஆற்றுகின்ற பணி மகத்தானது!**

இந்த நீண்ட நெடிய போராட்டத்தில் ஏற்றங்களும் இருந்திருக்கின்றன. இறக்கங்களும் இருந்திருக்கின்றன.

ஆனால் இன்று இந்தியப் பெண்கள் பல்வேறு துறைகளிலே மிளிர்கிறார்கள். சிலவற்றைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், விஞ்ஞானத்திலே, அறிவிலே, ஆற்றலிலே, கலாச்சாரத்திலே, விளையாட்டிலே. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நம்முடைய குடும்பத்தினுடைய மையப் பொருளாக, மக்களுடைய தலைவர்களாக; அவர்கள் ஆற்றுகின்ற பணி மகத்தானது. இருந்தாலும் கூட, இந்தப் போராட்டம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டும். இன்னும் பல்வேறு தடைகளைத் தாண்ட வேண்டும். இருந்தாலும், நம்முடைய ஏழை எளிய சகோதரிகள் இன்னும் ஏராளமான தடைகளைத் தாண்டித்தான், இந்த சமத்துவத்தை பெறுவதற்கான சூழ்நிலை உருவாகி இருக்கின்றது.

மகாத்மா காந்தி அவர்களுடைய தலைமையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சாத்வீகமான வன்முறையற்ற சுதந்திரப் போராட்டம் மகளிர் சமத்துவத்தை முன்னிலைப்படுத்தியது. 1928-ஈல் அரசியல் சாசன சட்ட வரைவு மோதிலால் நேரு அவர்கள் தலைமையிலான குழு தயார் செய்து, அந்த அறிக்கையை சமர்ப்பித்தது.

அதற்குப் பிறகு கராச்சியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் இந்த தேசத்தின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள், கராச்சி தீர்மானம் என்கின்ற பெயரில் வடிவமைக்கப்பட்ட தீர்மானங்கள், இந்த இரண்டு ஆவணங்களும் பெண்களுடைய உரிமைகளை கொண்டாடுவதிலும், அவர்களுக்கு வாக்குரிமை அளிப்பதிலே சமத்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதிலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும், செயல்பாடுகளிலே அவர்களுக்கு சரியான பங்கு தரப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியது.

இந்த இரண்டு ஆவணங்களும் தந்த அடிப்படையில் தான் நம்முடைய பெண்கள், ஒரு மிகப் பெரிய சமூக மாற்றத்திற்கான முன்னெடுப்பை நோக்கி பயணிக்க ஆரம்பித்தார்கள்.

இதைத்தான் எல்லோருக்குமான வாக்குரிமை, பாலின சமத்துவம், சோசலிச அறம் சார்ந்த சமூகம் இவைகளையெல்லாம், அந்த இரண்டு ஆவணங்களில் சொல்லப்பட்ட அந்த விஷயங்களில்தான், பாபா சாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இந்திய அரசியல் சாசன சட்டத்தினை வரையறுக்கின்றபோது இந்த தத்துவங்களை உள்வாங்கி அதனை மேலிடத்துக்கு செல்லக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஒரு ஆண்மகனை நீ படிக்க வைத்தால் ஒரு தனி நபரை மட்டும் படிக்க வைக்கிறாய். ஆனால் ஒரு பெண்ணுக்கு கல்வி கொடுத்தால், ஒரு குடும்பத்திற்கே கல்வி கற்றுத் தரப்படுகிறது. மகளிரை அதிகாரப்படுத்தினால் இந்தியாவை அதிகாரப்படுத்துகிறோம் என்கின்ற ஜவஹர்லால் நேரு அவர்களுடைய வார்த்தைகளை யார் மறக்க முடியும்?

**திருமதி இந்திரா காந்தி தலைமைத்துவம்**

அன்னை இந்திரா காந்தி அவர்கள் காண்பித்த தலைமைத்துவம், அவர்கள் காண்பித்த ஆற்றல், அவர்கள் காட்டிய வழிகாட்டுதல், ஒரு பெண் எப்படி தலைமை ஏற்று செயல்பட முடியும் என்பதற்கான மிகப்பெரிய எடுத்துக்காட்டு. ஏழை, எளிய மக்களுக்கான நல்வாழ்வை அளிப்பதற்கும், வறுமையை ஒழிக்க வேண்டும் என்கின்ற அர்ப்பணிப்போடும், அவர்கள் ஆற்றிய பணியை யாரும் மறக்க முடியாது.

ராஜீவ்காந்தி அவர்கள் வரலாற்று புகழ்மிக்க 33 சதவிகித இட ஒதுக்கீட்டை பெண்களுக்காக ‘பஞ்சாயத்து’ ராஜ் சட்டத்திலும் உள்ளூர் ஆட்சி அமைப்புகளிலும் கொண்டு வந்தார். அந்தச் சட்டத்திருத்தமானது சமூகத்தின் அடித்தளத்தில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, பெண்களுக்கு தலைமைப் பொறுப்புகளை அளித்து ஒரு சமூகப் புரட்சிக்கு வித்திடுகின்ற மிகப்பெரிய திட்டமாக அது அமைந்தது.

ராஜீவ் காந்தி அவர்கள் ஏற்படுத்திக்கொடுத்த 33 சதவிகித இட ஒதுக்கீடு தான் இன்றைக்கு நாடாளுமன்றத்தில் மகளிர்க்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்கின்ற சட்டத்தினுடைய முன்னெடுப்பாக அமைந்தது.

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

### பன்முகத்தன்மை கொண்ட மாபெரும் தலைவர் கலைஞர்!



**தன்னுடைய வாழ்க்கை முழுமையும் ஏழை எளிய மக்களுக்காக உழைத்தவரும், இந்தியத் தாயினுடைய தவப்புதல்வர்களில் ஒருவரும், நம்மால் அன்போடு கலைஞர் என்று அழைக்கப்படக்கூடியவருமான அருமைக்குரியத் தலைவர் கலைஞர் அவர்கள், ஒரு பன்முகத்தன்மை கொண்ட ஒரு மாபெரும் தலைவர். ஒரு எழுத்தாளராக, ஒரு பத்திரிகையாளராக, ஒரு முதலமைச்சராக, ஒரு நிர்வாகியாக அவர் ஆற்றியப்பணிகள் மகத்தானப் பணிகள்.**

## மகளிர் இட ஒதுக்கீடு மசோதா சட்டம் என்று பெண்களை ஏமாற்றுகிறார் பிரதமர் மோடி ! நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து

# 2024 ஆம் ஆண்டு தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்துவோம்!

## மகளிர் உரிமை மாநாட்டில் - கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை!

**சென்னை, அக்.16-**

**பெண்களை ஏமாற்ற மகளிர் இடஒதுக்கீடு மசோதா சட்டம் என ஏமாற்றுகிறார் பிரதமர் மோடி என்றும் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து 2024 ஆம் ஆண்டு தேர்தலில் ஒன்றிய பா.ஜ.க. அரசை வீழ்த்துவோம் என்றும் மகளிர் உரிமை மாநாட்டில் தலைமையேற்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று முன்தினம் (14.10.2023) கழக மகளிரணி நடத்திய ‘மகளிர் உரிமை மாநாட்டு’க்குத் தலைமை தாங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

பெண்ணினத்தின் எழுச்சியின் அடையாளமாக, இந்த மாநாட்டை ஒரு ‘மாநில மாநாடு’ போல் ஏற்பாடு செய்து, இதை எழுச்சியோடு நடத்திக் கொண்டிருக்கிறார் நம்முடைய தங்கை கனிமொழி அவர்கள். அவர் கர்ஜனை மொழியாக கனல் மொழியாக இப்போது நாடாளுமன்றத்தில் முழங்கி வருவதைப் பார்க்கும்போது, கழகத் தலைவராக மட்டுமல்ல, அண்ணனாகவும் நான் மிகுந்த பெருமை அடைந்து வருகிறேன். இந்த மகளிர் உரிமை மாநாட்டைத் தடையின்றி ஓடும் மாரத்தான் ஓட்டம் போல் நம்முடைய அமைச்சர் மா.சு. அவர்கள் துணை நின்று ஏற்பாடு செய்திருக்கிறார். அவர் மட்டுமல்ல, நம்முடைய அமைச்சர் செயல்வீரர் தா.மோ.அன்பரசன் அவர்களும் துணை நின்று தன்னுடைய கடமையை நிறைவேற்றித் தந்திருக்கிறார். அதற்காக முதலில் நான் அவர்களை எல்லாம் வாழ்த்துகிறேன்.

மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி உள்ளிட்ட மகளிரணி நிர்வாகிகள் அனைவருக்கும் என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இருக்கும் பெரும்பாலான மாநிலத்தைச் சேர்ந்த பெண் தலைவர்களை அழைத்து வந்து, ஏற்றத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு, தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடாக மட்டுமல்ல இந்தியப் பெண்களின் மாநாடாக அமைந்துள்ளது என்பதை நான் பெருமையோடு பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன்.

இதுவரை ‘சென்னை சங்கமம்‘ நடத்திக் காட்டிய தங்கை கனிமொழி அவர்கள், இப்போது இந்தியச் சங்கமத்தை நடத்திக் காட்டி இருக்கிறார். இதுதான் வித்தியாசம். இவை அனைத்துக்கும் மகுடம் வைப்பது போல அன்னை சோனியா காந்தி அவர்கள் வருகை தந்துள்ளார்கள்.

‘நேருவின் மகளே வருக! நிலையான ஆட்சியைத் தருக!’ என்று 1980 ஆம் ஆண்டு இந்திரா அம்மையாரைச் சுட்டிக்காட்டிச் சொன்ன தலைவர் கலைஞர் அவர்கள், 2004ஆம் ஆண்டில், ‘இந்திராவின் மருமகளே வருக! இந்தியாவின் திருமகளே வெல்க!’ என்று வரவேற்றுச் சொன்னார்.

தலைவர் கலைஞர் சொன்னதைப் போலவே நாம் நாற்பதுக்கு நாற்பது வெல்ல, அகில இந்திய அளவில் காங்கிரஸ் கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றது. அப்போது தனக்காக காத்திருந்த பிரதமர் பதவியை மறுத்து இந்திய அரசியல் வானில் ஒரு கம்பீரப் பெண்மணி என நின்றவர் அன்னை சோனியா காந்தி அவர்கள். அப்போது அன்னை சோனியா காந்தி அவர்கள்தான் ஆட்சிக்குத் தலைமை வகித்து பிரதமராக வேண்டும் என்று முன்மொழிந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அது வரலாறு.

**இந்திய அரசியல் வானில் கம்பீரப் பெண்மணி அன்னை சோனியா!**

When Thalaivar Kalaignar left us to his resting place, Madam Sonia Gandhi sent a letter to me. (தலைவர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து அவர் ஓய்விடத்துக்குச் சென்றபோது, அன்னை சோனியா காந்தி அவர்கள் எனக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்.)

She wrote, “For me, Kalaignar’s loss is very personal. He always showed me great kindness and consideration, which I can never forget. He was like a father figure to me.” (அதில் அவர், “கலைஞர் அவர்களின் மறைவு எனக்குத் தனிப்பட்ட முறையிலும் இழப்பாகும். என் மீது அவர் எப்போதுமே மிகுந்த கனிவும் அக்கறையும் கொண்டிருந்ததை நான் எப்போதுமே மறக்க இயலாது. அவர் எனக்கு ஒரு தந்தையைப் போன்றவர்” என்று குறிப்பிட்டிருந்தார்.)

அத்தகைய ஆழமான குடும்பப் பாச நட்பைக் கொண்டவர் அன்னை சோனியா காந்தி அவர்கள். அவரும் இளம் அரசியல் ஆளுமையாக மிளிரும் அருமைச் சகோதரி பிரியங்கா காந்தி அவர்களும் இங்கு வந்திருப்பது நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. தன்னிகரில்லா மெஹபூபா முப்தி அவர்கள் ஒரு மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர். சுப்ரியா சுலே எழுந்தாலே நாடாளுமன்றத்தில் பா.ஜ.க.வினர் அஞ்சி நடுங்குவார்கள்.

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.10.2023) சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக மகளிர் அணி ஒருங்கிணைப்பில் நடைபெற்ற மகளிர் உரிமை மாநாட்டில், தலைமையுரை ஆற்றினார். இவ்விழாவில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் திருமதி. சோனியா காந்தி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், கழக துணை பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி, ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் திருமதி மெஹபூபா முஃப்தி, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர் திருமதி சுப்ரியா சுலே எம்.பி., பீகார் மாநில அமைச்சர் திருமதி லெஷி சிங், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உ திருமதி சுபாஷினி அலி, சமாஜ்வாதி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி டிம்பிள் யாதவ், இந்திய மாதர் தேசிய சம்மேளத்தின் பொதுச் செயலாளர் திருமதி ஆனி ராஜா, ஆம் ஆத்மி கட்சியின் தேசிய நிர்வாக குழு உறுப்பினரும், தில்லி சட்டப்பேரவை துணைத் தலைவருமான திருமதி ராக்கி பிட்லன், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தேசிய செய்தி தொடர்பாளர் திருமதி சுஷ்மிதா தேவ், சமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த திருமதி சுஹி சிங், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி, கழக மகளிர் அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 16-10-2023

# ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான போர்!

இஸ்ரேல் - பாலஸ்தீனத்துக்கு இடையில் நடப்பது; ஆக்கிரமிப்பாளருக்கும் ஆக்கிரமிப்பை எதிர்ப்பவருக்கும் இடையே நடக்கும் போர்!

**புலம்பெயர்ந்து வந்திருந்த யூதர்கள் நலனுக்காக உருவாக்கித் தரப்பட்ட நாடு இஸ்ரேல். அதுவும் பாலஸ்தீனத்தில் இருந்து பிரித்து உருவாக்கித் தரப்பட்டது. எப்போதுமே சும்மா கிடைத்த மாட்டைத் தானே பல்லைப் பிடித்துப் பார்ப்பார்கள். இருக்க இடம் கொடுத்தால், படுக்க இடம் கேட்பார்கள். அப்படி, எந்த பாலஸ்தீனத்தில் இருந்து ஒரு நாட்டை உருவாக்கிக் கொடுத்தார்களோ, அந்த பாலஸ் தீனத்தையே ஆக்கிரமித்தது இஸ்ரேல். ஆக்கிரமிப்பையே தொழிலாக வைத்துக் கொண்டும் வருகிறது இஸ்ரேல். இதனை அமைதியாக அல்ல, அச்சுறுத்தும் வகையில் செய்து வருகிறது அந்த நாடு.**

பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு தனிநாடு என்ற பிரிட்டனின் திட்டத்துக்கு சர்வதேச நாடுகளின் கூட்டமைப்பும் 1922-ல் ஒப்புதல் வழங்க, ஐரோப்பிய நாடுகளில் இருந்த யூதர்களில் 90 ஆயிரம் பேர் பாலஸ்தீனத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டு அங்கே குடியமர்த்தப்படுகிறார்கள்.ற அமை இரண்டாம் உலகப் போருக்குப் பின் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை பாலஸ்தீனத்தை மூன்றாகப் பிரித்து அரபு நாடு, யூத நாடு, ஜெரூஸலம் தனி என 1947 நவம்பர் 29-ல் அறிவித்தது. இதன்படி பாலஸ்தீனில் 70 சதவிகிதம் உள்ள முஸ்லிம்களுக்கு 43 சதவிகித இடமும், 30 சதவிகிதம் உள்ள யூதர்களுக்கு 56 சதவிகிதம் இடமும் சொந்தம் என பிரிவினை செய்யப்பட்டது.

1948 வரை பாலஸ்தீனம் பிரிட்டன் கட்டுப்பாட்டில் இருந்தது. 1948-ஆம் ஆண்டு மே 14-ஆம் தேதி பிரிட்டன் அதிகாரபூர்வமாக பாலஸ்தீனிலிருந்து வெளியேறியது. இஸ்ரேல் என்கிற தேசம் உருவாகிவிட்டதாக யூதர்கள் அறிவித்துவிட்டார்கள். ஆம், ஒரு தனிநாடாக இஸ்ரேல் உருவாகிவிட்டது. **பாலஸ்தீனத்தில் இசுலாமியப் படுகொலைகள், அகதிகளாகத் துரத்தப்படுதல் என .. இப்படி அந்த நிலப்பரப்பே ரத்தச் சகதியாக இருப்பதற்கு இஸ்ரேல் தான் முக்கியக் காரணம்.**

வலுக்கட்டாயமாக பாலஸ்தீனர்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை இஸ்ரேல் விழுங்கியது. அங்கு தங்கள் மக்களைக் கொண்டு போய் குடியேற்றினார்கள். இந்தச் சூழலில் பாலஸ்தீனத்தின் வரைபடம் என்பதே கடுகு போலத் தேய்ந்தது. இஸ்ரேலின் வரைபடம் கொழுத்தது. இன்றைய இஸ்ரேலின் பரப்பளவு 21 ஆயிரம் சதுர கிலோ மீட்டர். பாலஸ்தீனத்தின் பகுதி என்பது 6 ஆயிரம் சதுர கிலோ மீட்டர்தான்.

**இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராக அமைப்பு ரீதியாக எதிர்க்குரல் கொடுத்தார் யாசர் அராபத். 1958 ஆம் ஆண்டு 'அல் - பத்தா' என்ற அமைப்பை அவர் உருவாக்கினார். பின்னர் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராகவும் அவர் ஆனார். 1974 ஆம் ஆண்டு ஐ.நா. சபையில் புகுந்து உரையாற்றும் அளவுக்கு அவரது செல்வாக்கு உயர்ந்தது. 'ஒரு கையில் ஒலியமரக் கிளையும் இன்னொரு கையில் விடுதலைப் போராட்டத்துக்கான துப்பாக்கியும் உள்ளன. எது வேண்டும் என்பதை உலகம் தீர்மானிக்க வேண்டும்' என்றார் யாசர் அராபத். அவராலும் மிக நீண்ட காலம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இஸ்ரேலுடன் சமரசம் செய்து கொண்டார். அதன் பிறகும் அவரை நிம்மதியாக அவர்கள் இருக்கவிடவில்லை. இறுதிக்காலத்தில் மிகுந்த நெருக்கடியை இஸ்ரேல் அவருக்குக் கொடுத்தது. பின்னர் உயிர் துறந்தார் அராபத்.**

இதற்கிடையில் இஸ்ரேலுக்கு எதிராக பாலஸ்தீனத்தில் உருவானது தான் 'ஹமாஸ்' இயக்கம் ஆகும். காசாவை தங்களது ஆளுகையில் வைத்துள்ளார்கள் ஹமாஸ் இயக்கத்தினர். இது தான் இப்போது போர்க்களமாகக் காட்சி அளிக்கிறது. மிகத் தொடர்ச்சியாக பாலஸ்தீனத்தவர்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் தொடுத்து வந்தது.

**கடந்த ஆண்டு கிழக்கு ஜெருசலேமில் கூடியிருந்த பாலஸ்தீனர்களை நோக்கி இஸ்ரேல் ராணுவம் கொடூரமான தாக்குதலை நடத்தியது. இந்த ஆண்டு மட்டும் 250க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்கள் மட்டுமல்ல, பத்திரிகையாளர்களும் கொல்லப்பட்டனர். அப்போதும் உலக நாடுகள் அமைதியாக இருந்தன. இஸ்ரேல் போர் தொடுக்கும் போதெல்லாம் அமைதியாக இருக்கும் உலகநாடுகள், ஹமாஸ் போர் தொடுத்ததும் அறிவுரை சொல்ல வந்து விடுகின்றன, ,'வலிமையானவன் சொல்வதே வேதம்' என்ற அடிப்படையில்!**

இப்போதும், ஹமாஸ் தாக்குதல் நடத்துவதற்கு முன்னதாக இஸ்ரேல், பல்வேறு சிறுசிறு தாக்குதலைத் தொடுத்து வந்துள்ளது. இதற்கு எதிர்வினையாக இவ்வளவு பெரிய தாக்குதலை ஹமாஸ் தொடுக்கும் என இஸ்ரேல் எதிர்பார்க்கவில்லை.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "இஸ்ரேல் ராணுவம் பதிலடி கொடுத்து நாட்டைப் பாதுகாக்கும். நாங்கள் யுத்தம் செய்கிறோம். அதில் நாங்களே வெல்வோம். எங்களின் எதிரி யோசித்துக்கூட பார்த்திராத விலையைக் கொடுக்கப்போகிறார்கள். எங்கள் முழு பலத்தையும் பயன்படுத்தி, காசா நகரில் ஹமாஸ் தீவிரவாதிகள் செயல்படும் அனைத்து இடங்களையும் அழிப்போம். இந்தப் போர் நீண்ட காலம் நடக்கும்" என்று ஆவேசமாகச் சொல்லி இருக்கிறார். அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி, நார்வே, பிரான்ஸ், ஸ்பெயின், போலந்து, உக்ரைன், பிரேசில் உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றன. இஸ்ரேலுக்கு ஆதரவாக நிற்கிறோம் என்று இந்தியப் பிரதமரும் அறிவித்திருக்கிறார்.

பாலஸ்தீன அதிபர் முகம்மது அப்பாஸ், "பாலஸ் தீனத்துக்குள் அத்துமீறிக் குடியேறுபவர்களுக்கு எதிராகவும், பாலஸ்தீனத்தை ஆக்கிரமிக்கும் இஸ்ரேலிய ராணுவ பயங்கரவாதத்துக்கு எதிராகவும் தங்களைத் தற்காத்துக் கொள்ளும் உரிமை என்பது பாலஸ்தீனியர்களுக்கு உண்டு" என்று தெரிவித்திருக்கிறார். இரான், சிரியா, சவுதி அரேபியா, ஏமன், கத்தார், தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகள் இவர்களை ஆதரித்திருக்கிறார்கள்.

**"பாலஸ்தீன மக்களின் நிலம், சுயராஜ்யம் மற்றும் அவர்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமைக்கான நீண்ட கால ஆதரவை காங்கிரஸ் அளித்துள்ளது. அதன்படி எங்கள் ஆதரவு தொடரும். இரு தரப்பினரும் தங்களது போரை உடனடியாக நிறுத்த வேண்டும்" என்ற காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியக் கமிட்டி தீர்மானம் மிகமிக முக்கியமானது. ஒன்றிய பா.ஜ.க. எடுத்துள்ள முடிவு அதிர்ச்சிக்குரியதாக இருக்கிறது.**

- தொடரும்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான நேற்று (15.10.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, துணை மேயர் மு. மகேஷ்குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான நேற்று (15.10.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, துணை மேயர் மு. மகேஷ்குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான நேற்று (15.10.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து அச்சிலையின் முன்பு புகைப்படம் எடுத்துக் கொண்ட காட்சி. இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான நேற்று (15.10.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, மாணவ, மாணவியருடன் கலந்துரையாடினார்.

## பா.ஜ.க. ஆட்சியில் குடியரசுத் தலைவர் முதல் சாதாரணப் பெண்கள் வரை யாருக்கும் நியாயம் இல்லை!

# பெண்களை முன்னேற்றக் கூடியது திராவிட மாடல் ஆட்சி!

## மகளிர் உரிமை மாநாட்டில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**சென்னை, அக்.16-**

**ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியிலே குடியரசுத் தலைவர் முதல் சாதாரண பெண்கள் வரை யாருக்கும் நியாயமில்லை என்றும் தமிழ்நாட்டில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சிதான் பெண்களை முன்னேற்றக் கூடியது என்றும் சென்னை ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெற்ற மகளிர் உரிமை மாநாட்டில் உரையாற்றுகையில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் குறிப்பிட்டார்.**

சென்னையில் தி.மு.க. மகளிரணி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் உரிமை மாநாட்டில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை வகித்து சிறப்புரையாற்றினார்.

அவரது உரை வருமாறு :

"சகோதரர்களே சகோதரிகளே என்று அழைத்தால் அதில் கூட பாகுபாடு வந்துவிடும் என்று, உடன்பிறப்பே என்ற ஒற்றை சொல்லால்... அந்த மந்திரச் சொல்லால் நம்மையெல்லாம் கட்டிப் போட்டு வைத்திருந்த தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டிலே... தேசிய அளவிலான மகளிர் உரிமை மாநாட்டை நடத்தும் வாய்ப்பினை எனக்கும் மகளிர் அணிக்கும் அளித்து அது வெற்றி பெறுவதற்கு முழு முதல் காரணமாக இருக்கக்கூடிய தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களே...

கலைஞர் அவர்கள் தியாகத் திருவிளக்கு என்று அன்போடு அழைத்த அன்னையார் சோனியா காந்தி அவர்களே...

இந்த நிகழ்ச்சி வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகளோடு அமர்ந்திருக்கும் பொதுச் செயலாளர், பொருளாளர் அவர்களே...

காஷ்மீரின் முன்னாள் முதலமைச்சர் மகபூபா அவர்களே... தமிழ்நாட்டிலே முதல் முதலாக உரையாற்ற வந்திருக்கக் கூடிய அடித்தட்டு மக்களின் தோழி பிரியங்கா காந்தி அவர்களே...

நாடாளுமன்றத்தில் எல்லோருடைய எல்லோருடைய மரியாதையையும் அன்பையும் பெற்றிருக்கக் கூடிய போராளி சுப்ரியா சுலே அவர்களே... சமூக மாற்றம், பொருளாதார நீதி இவற்றுக்காக தன் வாழ்நாளெல்லாம் சுற்றி சுழன்று பணியாற்றக்கூடிய தோழியர் சுபாஷினி அலி அவர்களே, தோழியர் ஆனி ராஜா அவர்களே... சமூக நீதிக்காக தன் வாழ்நாளெல்லாம் பாடுபட்ட முலாயம் சிங் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த டிம்பிள் யாதவ் அவர்களே... சாதிவாரி கணக்கெடுப்பில் புரட்சி செய்திருக்கக்கூடிய முதலமைச்சர் நிதிஷ் குமார் அவர்களின் கட்சியின் அமைச்சர் லேஷி சிங் அவர்களே டெல்லி சட்டமன்றத்தின் துணை சபாநாயகர் ராகி பிட்லன் அவர்களே....திருணமூல் காங்கிரஸிலிருந்து வந்து ஆணித்தரமாக அழுத்தமாக உரையாற்றிய அமர்ந் திருக்கக்கூடிய சுஷ்மிதா தேவ் அவர்களே... மகளிர் அணி மாநிலச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அவர்களே, மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி அவர்களே... இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களே மாவட்ட கழகத்தின் செயலாளர்களே... இந்த கூட்டம் இவ்வளவு வெற்றிகரமாக நடைபெறு வதற்கு அத்தனை உதவிகளையும் செய்து இந்த கூட்ட ஏற்பாடுகளை எல்லாம் முன் நின்று நடத்தி தந்திருக்க கூடிய அமைச்சர் மா. சுப்பிரமணி யன் அவர்களே... அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களே இந்த நிகழ்ச்சியிலே லேட்டா வந்தாலும் லேட்டஸ்ட்டா வந்து கலந்து கொண்டிருக்க கூடிய இளைஞர் அணியின் செயலாளர் உதயநிதி அவர்களே... அவர் உள்ளிட்ட அணி செயலாளர்களே... நாடாளுமன்ற உறுப்பினர்களே.. சட்டமன்ற உறுப்பினர்களே... திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி செயல் வீரர்களே உங்கள்



அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றினால் ஆயிரம் விளக்குகளை ஏற்ற முடியும். அறிவொளி பெற்ற ஒரு பெண்ணாலும் அத்தகைய ஒளியை உருவாக்க முடியும் என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள். அப்படி அறிவொளி பெற்ற தீபங்களாக இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்க கூடிய எங்கள் மகளிர் அணியின் சகோதரிகள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்தை, வரவேற்பை, நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் மாநாடுகள் என்பது மகளிர் உரிமை மாநாடுகள் என்பது நமது திராவிட இயக்கத்திலே நூறு ஆண்டு வரலாற்றை கொண்டிருக்கக் கூடிய ஒன்று.

தந்தை பெரியார் நடத்திய மாநாட்டில் கண்ட கனவுகள்தான் தலைவர் கலைஞரின் ஆட்சி காலத்திலே பெண்களின் கல்வியாக, முன்னேற்றமாக வேலை வாய்ப்புகளாக பெண்களுடைய வாழ்க்கையே மாற்றி காட்டிக் கொண்டு இருக்கக்கூடிய சாதனைகளாக மிளிர்ந்தன.

### 100 ஆண்டுகள் வரலாற்றை கொண்டுள்ள மாநாடு!

அதுபோல இந்தச் சமூகத்தில் பேசக் கூடியவர்கள் எல்லோரும் ஒன்றை குறிப்பிடுவார்கள். ஒரு பெண்ணுக்கு ஆண் தான் பாதுகாப்பு என்று. பெண்களுக்கு ஆண் இருந்தால் தான் பாதுகாப்பு என்று சொல்லுவார்கள். ஆனால், பெண்களுக்கு காவல்துறையிலே வாய்ப்பளித்து ஆணுக்கும் பெண்தான் பாதுகாப்பு என்று காட்டியவர் தலைவர் கலைஞர்.

நம்முடைய தலைவர் கலைஞர் ஆட்சியின் நீட்சியாக தளபதி அவர்களின் அரசு தொடர்ந்து பெண்களுக்கான வாய்ப்புகளை பெண்களை பேணி காக்கக்கூடிய ஒரு ஆட்சியாக இன்று மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

ஆட்சி பொறுப்பு ஏற்றுக் கொண்ட முதல் நாளே.. பெண்களுக்கான இலவச பயண பேருந்து பயணத்தை நடைமுறைப்படுத்திக் காட்டியவர் நமது தளபதி. அதே போல படிக்க வேண்டும் என்ற ஒரு கனவோடு இருக்கக்கூடிய பெண்ணின் கனவை எதுவுமே சிதைத்து விடக்கூடாது என்பதற்காக நீ எவ்வளவு படித்தாலும் உன்னோடு ஒரு அண்ணனாக நான் இருக்கிறேன் என்று மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்தவர் அண்ணன் தளபதி.

### உரிமைத் தொகை மாதம் ரூ.1000 வழங்குபவர் முதல்வர்!

வீட்டிலே இருக்கக்கூடிய சகோதரிகளை பற்றி யாராவது கேட்டால்... வீட்ல என்ன பண்றாங்கன்னு கேட்டால் சொல்லுவார்கள், சும்மா இருக்காங்க என்று. யாராவது சும்மா இருக்கீங்களா? இல்லை... எல்லாரும் எழுந்துக்கறதுக்கு முன்னாடி எழுந்து சகோதரிகள் செய்யும் வேலையெல்லாம் சொன்னால் அதுவே பத்து நிமிடம் ஆகிவிடும். சமைத்து, துணி துவைத்து என ஓடிக்கொண்டே இருந்து எல்லோரும் தூங்கிய பிறகு உறங்கச் செல்லக்கூடிய உழைப்பின் சிகரங்களாக இருக்கக்கூடிய உங்களுக்காக... உங்கள் உழைப்பை நான் மதிக்கிறேன், நான் ஏற்றுக்கொள்கிறேன், கொண்டாடுகிறேன் என்று சொலக்கூடிய வகையிலே கலைஞர் உரிமைத்தொகை... உதவித் தொகை இல்லை என்று சொல்லி உரிமைத்தொகை என்று சொல்லி மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கியவர் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி. இதுதான் திராவிட மாடல் ஆட்சி.

தமிழ்நாட்டிலே 11 பெண் மேயர்கள் இருக்கிறார்கள், இங்கே வந்திருக்கிறார்கள். 11 பெண் மேயர்கள் இருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடு. இப்படிப்பட்ட வாய்ப்புகளை எல்லாம் உருவாக்கி தந்து கொண்டிருக்கக் கூடியவர்கள் நாம்.

ஆனால் ஒன்றிய அரசாங்கத்தில் நம்முடைய பிரதமர் இருக்கிறார். அவருடைய உரையாடல்கள் எல்லாம் பெண் சக்தியை, நாரி சக்தியை நாங்கள் கொண்டாடுகிறோம் என்று பொய் புரட்டுகளை சொல்லிக் கொண்டிருப்பார்கள். இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்ட சொன்னது போல மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவை கொண்டு வந்தார்கள்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியிலே 2010 லே அம்மையார் சோனியா காந்தி வலியுறுத்தலிலே நம்முடைய ஆதரவோடு மகளிர் மசோதா ராஜ்யசபாவிலே நிறைவேற்றப்பட்டது. அதற்கு எந்த கண்டிஷனும் இல்லை. இதெல்லாம் இருந்தால்தான் அதை நடைமுறைக்கு கொண்டு வருவோம் என்ற நிலை இல்லை.

### 25 ஆண்டுகள் ஆனாலும் நடைமுறைக்கு வராத மசோதா!

ஆனால் பா.ஜ.க. மார்தட்டிக் கொள்கிறார்களே... இப்போது கொண்டு வந்திருக்கிற மகளிர் மசோதா பத்து ஆண்டுகள் 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் ஆனாலும் நடைமுறைக்கு வர முடியாத மசோதாவைக் கொண்டுவந்து தேர்தலுக்காக ஏமாற்றத் துடிக்கிறார்கள்.

பா.ஜ.க. ஆட்சியிலே நாட்டிலே எந்த பெண்ணுக்காவது பாதுகாப்பு இருக்கிறதா? மணிப்பூர் பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. நானும் சுஷ்மிதா தேவ் அவர்களும் முகாம்களில் சென்று பார்த்தபோது, சொல்லொணா துயரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதே பா.ஜ.க. குஜராத்தில் செய்த அட்டூழியங்களால் அநியாயங்களால் பெண்கள் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டார்கள் என்பதை நாம் இன்று வரை மறந்து விட முடியாது.

மதக் கலவரங்கள், காழ்ப்புணர்வு அரசியல், வெறுப்பு அரசியல் என்று வரும்பொழுது மிகப் பெரிய அளவில் பாதிக்கப்படுவது பெண்கள்தான் என்பதை இங்கே இருக்கக்கூடிய சகோதரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

### அவமானப்படுத்தப்படும் குடியரசுத் தலைவர்!

இந்த நாட்டின் முதல் குடிமகள் என்று சொல்லக்கூடிய குடியரசு தலைவர். ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த ஒரு பெண் என்பதால் கோயிலுக்குள் செல்ல முடியாது, பாராளுமன்றத்திற்கு வர முடியாது என்று அவமானப்படுத்தப்படுகிற நிலை இந்த நாட்டிலே முதல் குடிமகளுக்கு நடந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்து விட முடியாது.

அதே போல பக்கத்திலே பாண்டிச்சேரியிலே பாஜக கூட்டணி அரசாங்கத்திலே ஒரு பெண் அமைச்சர் ராஜினாமா கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார். அந்த ராஜினாமா கடிதத்திலே அவர் குறிப்பிட்டார், நான் ஒரு பெண் ஒரு தலித் என்பதால் இன்று இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன், ராஜினாமா செய்ய வற்புறுத்தப்பட்டிருக்கிறேன் எனக்கு வேறு வழியில்லை என்று ஒரு அமைச்சர் சொல்லக்கூடிய நிலை.

அதேபோல டெல்லியிலே விளையாட்டு வீராங்கனைகள் தங்களுக்கு நியாயத்துக்காக மாதக் கணக்கில் போராடினார்கள். அவர்களுக்கு நியாயம் கிடைத்ததா இல்லை? இந்த ஆட்சியிலே யாருக்கும் குடியரசு தலைவராக இருக்கட்டும்... வீராங்கனைகளாக இருக்கட்டும் சாதாரண பெண்ணாக இருக்கட்டும் யாருக்குமே பாதுகாப்பில்லை. நியாயம் இல்லை என்ற நிலையை தான் மத்தியிலே ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பிஜேபி ஆட்சி உருவாக்கி தந்திருக்கிறது. இந்த நிலை நீடிக்க வேண்டுமா நீடித்தால் பெண்களுக்கு பாதுகாப்பு இருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

### தமிழ்நாட்டில் 43% பெண்கள் வேலைக்குப் போகிறார்கள்!

இன்று இந்தியாவில் அதிகமாக பெண்கள் வேலைக்கு போகக் கூடிய பெண்கள் இருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடு. தமிழ்நாட்டில் 43% பெண்கள் வேலைக்குப் போகிறார்கள். ஆனால் இந்த நாட்டிலே பிஜேபி ஆட்சியில் முதலில் 2016 இல் 15% பெண்கள் வேலைக்கு போகும் நிலை இருந்தது. ஆனால் இப்போது 8% ஆக அது குறைந்திருக்கிறது.

பெண்களுக்கு எதிர்காலம் இல்லை. பாதுகாப்பு இல்லை என்ற நிலையை தான் இவர்கள் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பெண்களுக்கு உருவாக்கி தந்திருக்கிறார்கள்.

இந்த நாட்டிலே வாக்களிப்பவர்களில் 50% பெண்கள் இருக்கிறார்கள். ஆனால் கொள்கை முடிவெடுப்பதில் பெண்களுக்கு இடமில்லை என்ற நிலைதான் நீடித்து வருகிறது. நாங்கள் யாசகம் கேட்கவில்லை எங்கள் உரிமைகளுக்காக போராடுகிறோம் என்று இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பெண்கள் நிமிர்ந்து நின்று போராட வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம் என்பதை மறந்து விடக்கூடாது.

பெண்கள் இல்லாமல் எந்த அரசியலும் இல்லை, எந்த கொள்கை உருவாக்கலும் இல்லை, எந்த அரசும் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம். வாருங்கள் வரலாற்றை மாற்றி எழுதுவோம்"

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சிறப்புரையாற்றினார்.

---

## திருவண்ணாமலை மாவட்டத்தில் - சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 16 -

திருவண்ணாமலை மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, நிதியுதவி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பான, முதல்வர் அவர்களின் நேற்றைய அறிவிப்பு வருமாறு:-

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பக்கிரிபாளையம் காந்திநகர்பகுதி, திருவண்ணாமலை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் இன்று (15.10.2023) காலை காரும், லாரியும் எதிர்பாராதவிதமாக நேருக்குநேர் மோதி ஏற்பட்ட விபத்தில் சம்பவ இடத்திலேயே இரண்டு குழந்தைகள் உட்பட ஏழுபேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் படுகாயமடைந்து திருவண்ணாமலை அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பெண்ணுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

# திருவொற்றியூர் மத்திய பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் ஆர்.காந்தி - ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் - தி.மு.தனியரசு பங்கேற்பு!


*சென்னை, அக்.16 -*

திருவெற்றியூர் மத்திய பகுதி செயலாளரும், இரண்டாவது மண்டலக்குழு தலைவருமான ஏ.வி. ஆறுமுகம் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 13.10.2023, வெள்ளிக்கிழமையன்று மாலை பார்த்த சாரதி தெரு, மணலியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டக்கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், எம்.எல்.ஏ, தலைமை வகித்தார்.

இராணிப்பேட்டை ஆர். காந்தி, ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்பி. கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, தி.மு.தனியரசு எம்.சி. எம். நந்தகோபால், வை.மா. அருள்தாசன், வ.முத்துசாமி, ஆர்.டி.ரமோஷ்குமார், வி. ஜி.தினகரன், நூர்கா கோதண்டம், என்.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஸ்டாலின், பா.செல்வராஜ் என்.விஜயரங்கன், எ.ஞானமூர்த்தி, எஸ்.ஸ்ரீதர், சாலை டி.கணேசன், மு.செல்வம், டி.கரிகாலச்சோழன், மிசா.பா.மதிவானன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு. ராஜேந்திரன், டி.ராமகிருஷ்னன், அறிவழகி, எம். ஆனந்தன், என்.பரந்தாமன், ஜெ.ஜெ.ஜெய்மதன், டி.ஏ. ராஜி இரா.முருகேசன், பி. சாந்தி, புழல் எம்.நாராயணன், ஜி.துக்காராம், ஜி.தயாளன் மி.வே.கருணாகரன், பெ. சர வனன், ஜி.ராஜேந்திரன், ந.திருசங்கு, இ.குமரவேல், யு.எளம்.குறலரசன், அ.இந்துமதி, எம்.வஜ்சிரவேல், ஆர்.சி.ஆசைதம்பி, எம். பி.குமார், ஆர்.எஸ்.சம்பத், கே.பிரபாவதி, இரா.குமரேசன், நா.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம். எல்.சரவணன், குறுத்து சி. முனுசாமி, க.பி.சதீஷ்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# மகளிர்க்கான இடஒதுக்கீடு - இந்தியா கூட்டணிதான் நிறைவேற்றும்!

## திருமதி. சோனியா காந்தி உரை.. முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி நாடாளுமன்றத்திற்குள்ளேயே பல முயற்சி களை மேற்கொண்டது.

மகளிர் இட ஒதுக்கீட்டிற்கான சட்டம், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால், 2010 மார்ச் மாதம் 9-ஆம் தேதியன்று மாநிலங்களவையில் நிறை வேற்றப்பட்டது. ஆனால் மக்களவையில் ஒரு கருத்தொற்றுமையை உருவாக்க முடியாத காரணத்தினால் அந்தச் சட்டத்தினை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

இப்போது இந்தச் சட்டம் நிறைவேறி இருக்கிறது என்று சொன்னால் கூட, இந்தச் சட்டத்திற்காக நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளும், நாம் கொடுத்த அழுத்தங்களும் மிக அதிகம்.

இங்கே பல்வேறு உறுப்பினர்கள் பேசியதுபோல இந்தச் சட்டம் என்றைக்கு நடைமுறைக்கு வரும்; என்று அமல்படுத்தப்படும்; என்று ஒரு தெளிவே இல்லாத ஒரு சூழ்நிலையிலே இந்த ஆண்டா, அடுத்த ஆண்டா, இன்னும் சில ஆண்டுகள் கழித்தா? என்கின்ற ஒரு நிரந்தரமற்ற தன்மையிலே இந்தச் சட்டம் உருவாக்கி இருப்பது, நாளை வருகின்ற இந்தியா கூட்டணி வந்துதான் இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டிய சூழ்நிலையை உருவாகும் என்ற எண்ணத்தை நமக்குத் தருகின்றது.

### அண்ணா-கலைஞர் முன்னெடுப்புகள்!

அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே அமைந்த அரசும், அதனைத் தொடர்ந்து கலைஞர் தலைமையிலே தொடர்ந்த அரசும் எடுத்துக் கொடுத்த முன்னெடுப்புகளும், செயல்படுத்திய திட்டங்களும், பெண்களுடைய வாழ்க்கையில் பல புரட்சிகளையும், பல முன்னேற்றங்களையும் தந்திருக்கன்றது.

அதன் அடிப்படையில் தான் இன்று தமிழ்நாட்டை இந்தியாவே புகழ்ந்து கொண்டிருக்கின்ற மகளிர் உரிமைகளையும், மகளிருடைய சமத்துவத்தையும் கொண்டாடக்கூடிய ஒரு ஒளிவிளக்காகத் திகழ்கின்றது என்று சொன்னால், அது மிகையாகாது.

வரலாற்று புகழ்மிக்க ஐந்துமுறை முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களுடைய ஆட்சி காலத்தில் தான், 1973-ஆம் ஆண்டில் காவல்துறையில் பெண்களுடைய பங்கை அவர்கள் உறுதி செய்தார். இன்று தமிழ்நாட்டில் இருக்கின்ற காவல்துறையிலே நான்கில் ஒரு பங்கு பெண்களாக இருப்பது எவ்வளவு பெருமை படக்கூடிய ஒரு செயல்.

இன்று இருக்கிற காவல்துறையினரில் நான்கில் ஒரு பங்கைக் சார்ந்தவர்கள் பெண்கள் என்கிற சூழ்நிலை இருக்கின்றது.

கலைஞர் அவர்கள் செய்த முக்கியமான மற்றொரு சீர்த்திருத்தம் என்னவென்று சொன்னால், அரசு பணிகளிலே பெண்களுக்கான இட ஒதுக்கீட்டைச் செய்தது. அதன் விளைவாக அரசுப் பணிகளிலே 30 விழுக்காட்டைச் சார்ந்தவர்கள் பெண்களாக இருந்தார்கள்.

### 40 சதவிகிதமாக உயர்த்திய முதல்வர் மு.க.ஸ்டாலின்!

இன்று நம்முடைய முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் தலைமையில் செயல்படுகின்ற இந்த அரசு அந்த 30 விழுக்காட்டை 40 விழுக்காடாக உயர்த்தி பெண்களை பெருமைப்படுத்தி இருக்கின்றது.

பெண்களுடைய நல்வாழ்வுக்காக தமிழ்நாடு அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பல்வேறு திட்டங்கள், சத்துணவுத் திட்டங்கள், பெண்களுடைய நல்வாழ்வுக்காக எடுத்துக் கொள்ளப்படுகின்ற மருத்துவத் துறையில் செயல்படுத்தக்கூடிய திட்டங்கள், தாய்மார்களுக்காகவும், பால் குடிக்கும் சேய்களுக்காகவும் அரசாங்கம் நிறைவேற்றப்படுகின்ற பல்வேறு திட்டங்கள் மிகச்சிறப்பாக செயல்படுகின்ற காரணத்தினால் தான் இன்று தமிழ்நாட்டில் தாய்-சேய் இறப்பு விகிதம் இந்தியாவிலேயே மிகக்குறைந்த நிலையிலே இருப்பதற்கு காரணமாக அதுதான் அமைந்துள்ளது.

கடந்த 9 ஆண்டு காலங்களாக மோடி அரசினுடைய நடவடிக்கைகள்- நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற திட்டங்கள், நாம் பெற்றுத்தந்த உரிமைகள், கடந்த 70 ஆண்டுகளிலே நாம் செய்த நல்ல முயற்சிகளை யெல்லாம், சீரழிக்கின்ற வகையில் செயல்படுவது நமக்கு ஏற்பட்டு இருக்கின்ற மிகப்பெரிய துரதிருஷ்டம்!

பெண்களை ஒரு அடையாளச் சின்னமாக மாற்றி, பழமையிலும், மரபிலும் ஏற்கனவே பின்பற்றி வருகின்ற பாரம்பரிய சூழ்நிலைகளில் மட்டும் தான் பெண்கள் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறது இந்த அரசு. அவர்களுக்காக ஒரு புதிய சுதந்திரத்தையும், உரிமைகளையும் அளிக்க அவர்கள் தயாராக இல்லை.

இதைப்போலத்தான் எல்லாத்துறைகளிலும் எல்லா சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும் அறம் சார்ந்த சமுதாயத்திற்குமாக நாம் பெற்ற அனைத்து உரிமைகளையும் கடந்த 9 ஆண்டு காலமாக சீரழிக்கப்பட்டு வருவதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### 'இந்தியா' கூட்டணி பெண்களை மேம்படுத்தும்!

நான் உறுதியாக நம்புகிறேன். நாம் ஏற்பாடு செய்து இருக்கின்ற "இந்தியா" கூட்டணி என்கின்ற இந்த அற்புதமான ஏற்பாடு - இதைப்போன்ற சமச்சீரற்ற தன்மைகளை எல்லாம் விலக்கி, பெண்களுக்கு உண்மையாகவே அவர்களுக்கு ஒரு சமத்துவ உலகை உருவாக்கிக்கொடுப்பதற்கான மிக அவசரமான நடவடிக்கைகளை நிச்சயம் மேற்கொள்ளும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நான் உறுதியாகச் சொல்லுகிறேன். இந்தியா கூட்டணி என்பது நிச்சயமாக இந்த மகளிர் இட ஒதுக்கீட்டுக்கான சட்டத்தை நிறைவேற்றியே தீரும். அதை நிறைவேற்றி ஒரு நல்ல சூழ்நிலையை நாம் ஏற்படுத்தியே தீருவோம்.

இங்கே குழுமியிருக்கின்ற நாம் அதற்கான உறுதியை எடுத்து அதனை நோக்கி செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இது இந்தியா கூட்டணியைச் சேர்ந்த கட்சிகள் நிச்சயமாக செய்யும். நாம் அனைவரும் சேர்ந்து போராடுவோம். நாம் அனைவரும் சேர்ந்து நிச்சயமாக இதனைச் சாதிப்போம்!

நன்றியோடு உழைப்போம்! வெற்றி நமதே!

இவ்வாறு திருமதி சோனியா காந்தி அவர்கள் உரையாற்றினார்.

### தொடக்கத்தில் தமிழில் பேசிய திருமதி சோனியா காந்தி

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள் தனது உரையை தொடங்கும்போது, "சகோதர சகோதரிகளே வணக்கம் என்று கூறி அதனைத் தொடர்ந்து ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

அவரது ஆங்கில உரையை காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம்.பி. யும், மாநில சிறுபான்மையினர் ஆணையக்குழுத் தலைவருமான பீட்டர் அல்போன்ஸ் தமிழாக்கம் செய்தார்.

'சென்னை சங்கமம்' நடத்திக் காட்டிய தங்கை கனிமொழி

# இப்போது 'இந்தியச் சங்கமத்தை' நடத்திக் காட்டியிருக்கிறார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை.. முதல் பக்கத் தொடர்ச்சி

பீகாரில் இருந்து அருமை நண்பர் நிதிஷ்குமாரின் குரலை எதிரொலிக்க லெஷி சிங் வந்திருக்கிறார். டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் எண்ணத்தைச் சொல்வதற்கு டெல்லி சட்டப்பேரவை துணைத் தலைவர் ராக்கி பிட்லன் வந்திருக்கிறார். சமாஜ்வாதி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அருமை நண்பர் அகிலேஷ் யாதவ் அவர்களது மனைவியுமான டிம்பிள் யாதவ் அவர்களும், அக்கட்சியின் மகளிர் அணி தேசிய தலைவர் ஜுஹி சிங் அவர்களும் வருகை தந்துள்ளார்கள். மேற்கு வங்கப் பெண் சிங்கம் மமதா பானர்ஜியின் பிரதிநிதியாக சுஷ்மிதா தேவ் வருகை தந்துள்ளார். இடதுசாரி இயக்கங்களின் பிரதிநிதியாக சுபாஷினி அலியும், ஆனி ராஜாவும் இடம்பெற்றுள்ளார்கள். எனவே இந்த மேடையே இந்தியா கூட்டணியாக காட்சியளிக்கிறது.

> **காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இருக்கும் பெரும்பாலான மாநிலத்தைச் சேர்ந்த பெண் தலைவர்களை அழைத்து வந்து, ஏற்றத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு, தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடாக மட்டுமல்ல இந்தியப் பெண்களின் மாநாடாக அமைந்துள்ளது என்பதை நான் பெருமையோடு பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன். இது வரை 'சென்னை சங்கமம்' நடத்திக் காட்டிய தங்கை கனிமொழி அவர்கள், இப்போது இந்தியச் சங்கமத்தை நடத்திக் காட்டி இருக்கிறார்.**

### அனைத்து மாநிலங்களிலும் ஒன்றுபட்ட கூட்டணி அமைக்க வேண்டும்!

I would like to request all the leaders present on the dais... The BJP can be defeated only through unity. Tamil Nadu has shown this since the 2019 elections. A united alliance, like the one in Tamil Nadu, should be formed in every state across India. (மேடையில் இருக்கும் தலைவர்கள் அனைவருக்கும் நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். பா.ஜ.க.வை ஒற்றுமையின் மூலமாக மட்டுமே வீழ்த்த முடியும். தமிழ்நாடு இதை 2019 தேர்தல் முதலே நிரூபித்து வருகிறது. தமிழ்நாட்டில் உள்ளது போல ஒன்றுபட்ட கூட்டணி இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் அமைக்கப்பட வேண்டும்.)

If the antiBJP parties can unite and rise above the minor differences, we can surely defeat the BJP, which is against the interests of the people of India.

I urge our sisters present here to relay this message to their party leaders! (பா.ஜ.க.வை எதிர்க்கும் அனைத்துக் கட்சிகளும் நமக்கிடையேயான சிறிய வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு நின்றால், நம்மால் நிச்சயம் இந்திய மக்களுக்கு எதிரான சக்தியான பா.ஜ.க.வை வீழ்த்த முடியும். இங்கே வருகை தந்துள்ள சகோதரிகள் இந்தச் செய்தியை உங்கள் கட்சித் தலைவர்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.)

பாரதீய ஜனதா கட்சியைத் தோற்கடிப்பது என்பது, இந்தியாவில் இயங்கும் அனைத்து ஜனநாயக சக்திகளின் வரலாற்றுக் கடமை! மகளிர் உரிமையைக் காக்க மாநாடு கூட்டி இருக்கிறார் கனிமொழி. மகளிர் உரிமை மட்டுமா? பாஜக ஆட்சியில் அனைத்து மக்களது உரிமைகளும் பறிக்கப்பட்டு விட்டது. இன்றைக்கு நாம் பார்க்கும் நாடாளுமன்ற அமைப்பு முறை இருக்குமா? மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மக்களாட்சி இருக்குமா? என்ற கேள்வி பெரிதாக எழுந்து வருகிறது.

ஒரே நாடு ஒரே மொழி ஒரே மதம் ஒரே பண்பாடு ஒரே தேர்தல் ஒரே தேர்வு ஒரே உணவு என்ற பெயரால் ஒற்றைக் கட்சி ஆட்சியைக் கொண்டு வரப்பார்க்கிறார் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள். அது நடந்தால், ஒரே மனிதர் என்ற எதேச்சாதிகாரத்துக்கு அது வழிவகுக்கும். எனவேதான் வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை முற்றிலுமாகத் தோல்வி அடையச் செய்ய வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வருவதால் பெண்களை ஏமாற்ற, மகளிருக்கு நாடாளுமன்றம் சட்டமன்றங்களில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு என்று சட்டம் கொண்டு வந்ததைப் போல ஏமாற்றுகிறார்கள். இங்கு உரையாற்றிய அத்தனை பேரும் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். எனவே நான் அதிகம் விளக்கம் சொல்ல விரும்பவில்லை.

### 2024 ஆம் ஆண்டுக்குப் பிறகு மோடி ஆட்சி இருக்கப் போவதில்லை!

33 விழுக்காடு இடஒதுக்கீடு பெண்களுக்குக் கிடைத்துவிடக் கூடாது என்ற சதி எண்ணத்தோடு தான் இந்தச் சட்டத்தையே பா.ஜ.க. கொண்டு வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். அப்படித்தான் எல்லோருக்கும் எண்ணம் வருகிறது.

'நடைபெற இருக்கும் நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தலில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்படும்' என்று இந்த சட்டம் சொல்லி இருந்தால் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நாமெல்லாம் பாராட்டலாம்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்த பிறகு அதை வைத்து தொகுதி மறுவரையறை முடிந்த பிறகு என்று சொல்கிறார்கள். பழைய படங்களில் "என் கையில் உள்ளதை நான் தர வேண்டுமானால் ஏழு மலையைச் சுற்றி வா! ஏழு கடலைச் சுற்றி வா!" என்று பூதம் சொல்வதாகக் கதை சொல்வார்கள் அல்லவா? அது போன்ற கப்சா சட்டத்தை மோடி நிறைவேற்றி விட்டு, பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு கொடுத்துவிட்டதாக பிரதமர் சொல்லிக் கொள்கிறார்.

2029ஆம் ஆண்டுதான் இந்த இடஒதுக்கீடு கிடைக்கும் என்றும், 2034ஆம் ஆண்டு கூட ஆகலாம் என்றும் கணக்கிட்டுச் சொல்கிறார்கள். எதுவாக இருந்தாலும் 2024 ஆம் ஆண்டுக்குப் பிறகு மோடி ஆட்சியில் இருக்கப் போவதில்லை என்ற முடிவுக்கு மக்கள் வந்துவிட்டார்கள்.

> **33 விழுக்காடு இடஒதுக்கீடு பெண்களுக்குக் கிடைத்துவிடக் கூடாது என்ற சதி எண்ணத்தோடுதான் இந்தச் சட்டத்தையே பா.ஜ.க. கொண்டு வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். அப்படித்தான் எல்லோருக்கும் எண்ணம் வருகிறது. 'நடைபெற இருக்கும் நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தலில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்படும்' என்று இந்த சட்டம் சொல்லி இருந்தால் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நாமெல்லாம் பாராட்டலாம். மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்த பிறகு அதை வைத்து தொகுதி மறுவரையறை முடிந்த பிறகு என்று சொல்கிறார்கள். பழைய படங்களில் "என் கையில் உள்ளதை நான் தரவேண்டுமானால் ஏழு மலையைச் சுற்றி வா! ஏழு கடலைச் சுற்றி வா!" என்று பூதம் சொல்வதாகக் கதை சொல்வார்கள் அல்லவா? அது போன்ற கப்சா சட்டத்தை மோடி நிறைவேற்றி விட்டு, பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு கொடுத்துவிட்டதாக பிரதமர் சொல்லிக் கொள்கிறார்.**

1996ஆம் ஆண்டு தி.மு.க. காங்கிரஸ் ஆதரித்த ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டபோது இந்த நிபந்தனைகளை நாம் விதிக்கவில்லை. 2010ஆம் ஆண்டும் நமது கூட்டணி அரசு இப்படி ஒரு சட்டத்தை கொண்டு வந்தபோதும் இது மாதிரியான நிபந்தனைகளை விதிக்கவில்லை. இப்போது பா.ஜ.க. நிபந்தனை போடுகிறது என்றால் அவர்கள் உண்மை யான அக்கறையுடன் இதனை கொண்டு வரவில்லை.

மகளிர் எந்த உரிமைகளையும் பெற்றுவிடக் கூடாது, வீட்டுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டும் என்று நினைக்கும் கட்சிதான் பா.ஜ.க. அன்னை சோனியா காந்தி அவர்களும் பிரியங்கா காந்தி அவர்களும் இந்த மேடையில் இருக்கிறார்கள். இங்கு ஒரு விஷயத்தை நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும். அவரே பேசுகிறபோது சொன்னார், பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள்தான், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை முதன்முதலாக உறுதி செய்தார்.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை முதன் முதலாக 1996ஆம் ஆண்டு வழங்கிய வர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். இப்போது உள்ளாட்சியில் 50 விழுக்காட்டில் பெண்கள் பொறுப்பில் இருக்கிறார்கள். பா.ஜ.க. கொண்டு வந்த சட்டத்தில், இன்னொரு முக்கியமான விஷயம், இதர பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கும் சிறுபான்மையின பெண்களுக்கும் இடஒதுக்கீடு வழங்கவில்லை. அப்படி வழங்கினால் தான் ஏழை எளிய விளிம்பு நிலை மக்களின் குரல் சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் ஒலிக்கும். அப்படி ஒலித்துவிடக் கூடாது என்று பா.ஜ.க. நினைக்கிறது.

இதை பா.ஜ.க.வின் அரசியல் தந்திரமாக மட்டுமல்ல, அரசியல் சதியாகவும்தான் பார்க்க வேண்டியுள்ளது. இதனை நாம் சுட்டிக் காட்டினால், ஒரு அரிய கருத்தைப் பிரதமர் அள்ளி விடுகிறார். அதாவது, பெண்களை சாதிரீதியாகப் பிளவுபடுத்தப் பார்க்கிறோமாம். சாதிரீதியாக, மதரீதியாக மக்களைப் பிளவுபடுத்துவது யார் என அனைவருக்கும் தெரியும்.

இடஒதுக்கீடு நாம் கேட்கிறோம் என்றால், சாதிரீதியாகப் பிரிப்பதற்காகவா கேட்கிறோம் என்பதல்ல. அனைத்து மகளிரும் எல்லாவித உரிமைகளும் பெற்றவர்களாக உயர வேண்டும் என்பதற்காகத்தான். இதை விட்டுக் கொடுத்துவிட்டால் அடுத்தடுத்து சமூகநீதியைக் காவு வாங்கி விடுவார்கள். எந்தச் சூழலிலும் சமூகநீதியை நாம் விட்டுக் கொடுத்துவிடக் கூடாது. இதுதான் நமக்கு இருக்க வேண்டிய உறுதி. ராகுல் காந்தி அவர்கள் சமூகநீதிக் குரலைத் தான் தொடர்ந்து எதிரொலித்து வருகிறார். இந்தியா கூட்டணி என்பது தேர்தல் கூட்டணியாக மட்டுமல்ல கொள்கைக் கூட்டணியாக அமைந்துள்ளது.

சமூகநீதி மதச்சார்பின்மை மாநில சுயாட்சி கூட்டாட்சிக் கருத்தியல் அனைவர்க்குமான அரசியல் பங்கீடு என்ற கோட்பாடுகளைக் கொண்டதாக இந்தியா கூட்டணி அமைந்துள்ளது. இந்தியா கூட்டணியை வெற்றி பெற வைப்பதன் மூலமாக மகளிர் உரிமை மட்டுமல்ல அனைத்து உரிமைகளும் அனைவருக்கும் கிடைக்கும் இந்தியாவை நாம் உருவாக்க வேண்டும்.

சொத்தில் சம உரிமை, வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு, ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக பெண்க ளைத்தான் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்ற சட்டம், கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவித் தொகை, விதவைகளுக்கு மறுவாழ்வு திட்டம், ஒரு ஏழைஎளிய குடும்பத்தில் பிறந்திருக்கும் பெண்ணுக்கு திருமணம் என்றால், அந்தப் பெண்ணுக்கு நிதி உதவி செய்யும் ஒரு அற்புதமான திட்டம், இப்போது மகளிர் உரிமைத் தொகை - கடந்த மாதம் 15ஆம் தேதி, 14 ஆம் தேதி இரவே சென்று சேர்ந்துவிட்டது. இந்த மாதம் 15ஆம் தேதி வரப்போகிறது - 14ஆம் தேதி இரவே வந்து சேரப்போகிறது. எனவே மாதாமாதம் ஆயிரம் ரூபாய். உதவித் தொகை அல்ல, பெண்களே... அது உங்களுக்கு இருக்கும் உரிமைத் தொகை. மறந்து விடாதீர்கள்.

பேருந்துகளில் விடியல் பயணம், பெண் அர்ச்சகர்கள், ஓதுவார்கள் நியமனம் இப்படி தமிழ்நாட்டு பெண்களுக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டும் நமது திராவிட மாடல் கொள்கைகள் இந்தியா முழுமைக்கும் பரவும் நாளே, மகளிர் உரிமை பெற்ற நாளாக அமையும்.

அதற்கான அடித்தளத்தை உருவாக்கும் இந்த மாநாட்டை நடத்திக் காட்டியிருக்கும் என்னுடைய அருமை தங்கை கனிமொழிக்கும் - அவருக்கு துணை நின்ற மகளிரணி நிர்வாகிகளுக்கும் என்னுடைய வாழ்த்துகள், பாராட்டுகள். வாழ்க! வாழ்க! INDIA வாழ்க! INDIA கூட்டணி வெல்க!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

சென்னை - அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில்

# முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் திருவுருவச் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, அக். 16 -

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான நேற்று (15.10.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக நிறு வப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வு பற்றிய விவரம் வருமாறு:

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூக நீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ்ச் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பைப் பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், 202122ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், "இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பெரும் வழிகாட்டியாகவும் திகழ்ந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அவர்களுக்கு சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

1931ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 15ஆம் நாள், இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் ஜைனுலாப்தீன் மற்றும் திருமதி.ஆஷியம்மா ஆகியோருக்கு மகனாக டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் பிறந்தார்.

டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், இராமேஸ்வரத்தில் பள்ளிப் படிப்பை முடித்து, திருச்சிராப்பள்ளி யிலுள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் இயற்பியல் பட்டப்படிப்பு பயின்றார். 1955 ஆம் ஆண்டு தன்னுடைய விண்வெளி பொறியி யல் படிப்பை சென்னையிலுள்ள எம்.ஐ.டியில் தொடங்கிய டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும்பெற்றார்.

ஒன்றிய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் வானூர்தி அபிவிருத்தி பிரிவில் விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், பின்னர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சிப்பணிகளைத் தொடர்ந்து, துணைக் கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார். மேலும், SLV III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினிI என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச்செய்தார்.

அவரது இத்தகைய வியக்கதக்க செயலைப் பாராட்டி ஒன்றிய அரசு இவருக்கு 1981 ஆம் ஆண்டு இந்தியாவின் பெருமைமிகு விருதான "பத்ம பூஷன்" விருது வழங்கி கௌரவித்தது. 1963 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் பல பணிகளை சிறப்பாக செய்த இவர், 1998 ஆம் ஆண்டு பொக்ரான் அணு ஆயுத சோதனையில் முக்கிய பங்காற்றியுள்ளார். "இந்தியாவின் ஏவுகணை நாயகன்" என்றும் "அணுசக்தி நாயகன்" என்றும் அவர் போற்றப்பட்டார்.

இந்தியாவின் 11 வது குடியரசு தலைவராக ஜுலை 25 ஆம் நாள் 2002ல் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் பதவியேற்றார். 2007 ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர் "மக்களின் ஜனாதிபதி" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.

மாணவர்களிடம் மிகுந்த அன்பு கொண்ட டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், "கனவு காணுங்கள், அந்தக் கனவு உறக்கத்தில் வரும் கனவாக இருக்கக் கூடாது. உறக்கத்தை விரட்டும் கனவாக இருக்க வேண்டும்" என்று மாணவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டினார். டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் அக்னி சிறகுகள், இந்தியா 2020 போன்ற பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். மேலும், 1990-ஆம் ஆண்டு 'பத்ம விபூஷண்' விருது, 1997-ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர் ஆவார்.

இத்தகைய பல்வேறு சிறப்புகளைக் கொண்ட டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களுக்கு சிறப்பு சேர்க்கும் வகையில், சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முன்னாள் குடியர சுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று காலை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, துணை மேயர் மு. மகேஷ்குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திர மோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர்

மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நீண்ட தமது அரசியல் பொது வாழ்வில், குரலற்றவர்களின் குரலாக ஒலித்தவர் -

# முத்தமிழறிஞர் கலைஞரின் திட்டங்கள்; சமூக நீதிக்கான சமகால சாட்சியங்கள்!

## 'நியூஸ்-18 தமிழ்நாடு' செய்திகள் தொலைக்காட்சி வெளியிட்ட சிறப்பு வீடியோ தொகுப்பு!

**'நியூஸ் - 18 தமிழ்நாடு' செய்திகள் தொலைக்காட்சியில், 14.10.2023 - சனிக்கிழமை அன்று இரவு, 'கதை யல்ல; வரலாறு' எனும் பகுதியில் 'குர லற்றவர்களின் குரல்' எனும் தலைப்பில் - தமிழினத் தலைவர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்க ளுக்குப் புகழ் மாலை சூட்டும், சிறப்பு வீடியோ தொகுப்பு வெளியிடப்பட்டது.**

**அதில் - கலைஞர் அவர்களின் நெடிய அரசியல் பொது வாழ்வைப் பாராட்டி படிக்கப் பெற்ற கருத்தோவியம் வருமாறு:-**




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்க ளின் அடையாளங்களுள் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியது அவரது கரகரத்த குரல். என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே என்று தொடங்கும் அந்தக் குரலைக் கேட்பதற்கு ஏங்கியவர் கள் ஏராளம். அந்தக் குரலைக் கேட்பதற் கென்றே கால்கடுக்கக் காத்திருந்தவர்கள் ஏராளம். அந்தக் குரலின் வழியாகக் கவிதை வந்தாலும் ரசிப்பார்கள், கருத் துரை வந்தாலும் ஏற்பார்கள், அறிவுரை வந்தாலும் கேட்பார்கள். ஆழமான ஆலோசனை வந்தாலும் பரிசீலிப்பார் கள். கடுமையான விமர்சனம் வந்தா லும் கவனம் செலுத்துவார்கள்.

அவருடைய அந்தக் கரகரத்த குரல் திராவிட இயக்கத்தின் கொள்கைகளைக் கொண்டு சேர்க்கும் குரலாக, தமிழ்நாட் டின் மூலை முடுக்களில் எல்லாம் ஒலித் திருக்கிறது. தமிழ்நாட்டு மக்களின் உரி மைக்குரலாக தமிழ்நாட்டுக்கு அப்பால் டெல்லி வரை ஒலித்திருக்கிறது. தி.மு.க. தொண்டர்களுக்கு நம்பிக்கை தரும் குர லாகத் தலைமுறைகள் கடந்து ஒலித்தி ருக்கிறது. இவையெல்லாமே அரசியல் குரல்கள். ஆனால் அரசியலுக்கு அப்பால் குரலற்றவர்களின் குரலாகப் பல தரு ணங்களில் ஒலித்திருக்கிறது கலைஞர் அவர்களின் குரல்.

### அது என்ன குரலற்றவர்களின் குரல்?

அரசாலும் சமூகத்தாலும் கண்டு கொள்ளப்படாதவர்கள், புறக்கணிக்கப் பட்டவர்கள், நிராகரிக்கப்பட்டவர்கள், பொருட்படுத்தப்படாதவர்களுக்குக் குர லற்றவர்கள் என்று பெயர். உதாரண மாக, ஊனமுற்றவர்கள் என்று சமூகத் தால் ஒருகாலத்தில் உதாசீனம் செய்யப்பட்டவர்கள் குரலற்றவர்கள். இயற்கை யின் பிழையால் மாற்றுப் பாலி னமாகப் பிறந்த காரணத்துக்காகச் சமூ



கத்தால் நிராகரிக்கப்பட்டவர்கள் குரலற்ற வர்கள்.

பிச்சைக்காரர்கள் என்றும் தொழு நோயாளிகள் என்றும் அழுக்குப்பிடித்த வர்கள் என்றும் அநாதைகள் என்றும் இழிவானவர்கள் என்றும் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு, அரசாங்கத்தால் கண்டு கொள்ளப்படாதவர்கள் பலரும் குரலற்ற வர்கள். நம்முடைய சுற்றத்தைச் சுத்த மாக வைத்திருக்க உதவும் தூய்மைப் பணியாளர்கள் பலரும் குரலற்றவர்களே. இன்னும் இன்னும் பல வகைகளில் ஒதுக்கலுக்கும் வெறுப்புக்கும் உள்ளான வர்கள் பலரும் குரலற்றவர்களே.

**அப்படிப்பட்ட குரலற்றவர்களின் எண் ணிக்கை வெகு சொற்பமாக இருக்கலாம். அவர்களது வாக்குகளுக்குத் தேர்தல் களத்தில் வெற்றி தோல்வியைத் தீர்மானிக் கும் சக்தி இல்லாமல் இருக்கலாம். ஆனாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல், அரசியல் லாப நட்டங்க ளைக் கணக்கிட்டுப் பார்க்காமல், அவர்க ளைத் தேடிச்சென்று, அவர்களின் பிரச்சி னைகளை எல்லாம் கனிவோடும் கருணை யோடும் ஆய்வுசெய்வது சமூகநீதித் தத்துவத்தை உள்வாங்கிய ஆட்சியாள ருக்கு முக்கியமானது.**


**அந்த வகையில் குரலற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டங் களைத் தீர்க்கமாகவும் தொலைநோக்குச் சிந்தனையுடனும் வகுத்து, முறையாக வும் சரியாகவும் செயல்படுத்தி, குரலற்ற வர்களின் குரலாக ஒலித்தவர் கலைஞர் அவர்கள்.** அவருக்கு நூற்றாண்டு கொண்டாடப்படும் இந்தச் சமயத்தில் எந் தெந்த அம்சங்களில் எல்லாம் கலைஞர் அவர்கள் குரலற்றவர்களின் குரலாக அதி காரபூர்வமாக ஒலித்தார் என்பதை இன் றைய தலைமுறைக்கு அறிமுகம் செய்கிறது இந்தச் சிறப்புத் தொகுப்பு.

### பிச்சைக்காரர் மறுவாழ்வு மையங்கள்!

அது 2021 ஆம் ஆண்டு. இந்திய உச்சநீதிமன்றத்திடமிருந்து ஒரு வித்தி யாசமான தீர்ப்பு ஒன்று வெளியானது. இந்தியாவில் யாரும் விருப்பப்பட்டுப் பிச் சையெடுக்கவில்லை, வறுமையே அவர் களைப் பிச்சையெடுக்கத் தூண்டுகிறது. ஆகவே, பிச்சையெடுக்கத் தடை போடு வதைவிட அவர்களுக்கு மறுவாழ்வு மையம் ஏற்படுத்தித் தருவதே முக்கியம். அதைச் செய்து தருவது அரசின் கடமை என்பதுதான் முக்கியத்துவம் வாய்ந்த அந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பின் உள்ளடக்கம்.

**இங்கே வியப்பு என்னவென்றால், இப்படியொரு தீர்ப்பை இந்திய உச்சநீதி மன்றம் வெளியிடுவதற்கு அரை நூற் றாண்டுக்கு முன்னரே, தமிழ்நாட்டில் பிச் சைக்காரர் மறுவாழ்வு மையங்களை உருவாக்கிவிட்டது தமிழ்நாடு அரசு. ஆம், 1971-ல் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு தரும் திட்டத்தை அறிவித்து செயல்வடிவத்துக் குக் கொண்டுவந்திருந்தார் அயப்போ தைய தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.**

பிச்சைக்காரர்களை அனுதாபத்தோடு அணுகி, பரிதாபத்துடன் பண உதவி செய்வதோடு நகர்ந்துகொள்வதே பொதுச் சமூகத்தின் வழக்கம். ஆனால் பிச்சைக்காரர்களை அப்படியே விட்டுவி டாமல், அவர்களுக்கு மறுவாழ்வு தர வேண்டும் என்று யாரும் குரல் எழுப்பிடாத நிலையில், அவர்களுக்குக் கைகொடுத்துக் காப்பாற்றிவிடும்



திட்டத்தை பிச்சைக்காரர்கள் மறுவாழ் வுத்திட்டம் என்ற பெயரில் கொண்டுவந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பிச் சைக்காரர் என்ற சொல்லைத் தவிர்த்து இரவலர் என்ற சொல்லைப் பயன்படுத் தினார்.

புதிதாகக் கட்டப்பட்ட விடுதிகளில் பிச் சைக்காரர்கள்தங்கள்குடும்பத்தினருடன் வசிக்க ஏற்பாடு செய்து கொடுத்தார். அத் தோடு, அங்கே அவர்களுக்குப் பயிரிடு தல், தொழில் செய்தல் உள்ளிட்ட பயிற்சி கள் தரப்பட்டன. அவர்கள் உணவுக்காக வெளியே சென்று பிச்சை எடுக்காமல் இருக்கும் வகையில் விடுதிகளிலேயே உணவு தரப்பட்டது. கலைஞர் அவர்கள் தலைமையிலான தி.மு.க. அரசு உரு வாக்கிய பிச்சைக்காரர் மறுவாழ்வுத்திட் டம் இந்தியாவுக்கே வழிகாட்டுகிறது என் றார் அப்போதைய தமிழ்நாடு ஆளுநர் கே.கே.ஷா.

### தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்!

உண்மையில், பிச்சைக்கார ர்களுக் கென்று யாரும் குரல் எழுப்பிடாத நிலை யில் அவர்களுக்கான குரலாக ஒலித்த கலைஞர் அவர்கள் செய்த மற்றொரு காரியம் கூடுதல் கவனம் பெற்றது. நாம் செல்லும் வழியில் பிச்சைக்காரர்கள் தென்பட்டால் அருகில் சென்று உதவி செய்வோம். ஆனால் அதே பிச்சைக்காரர் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருந்தால், நாம் உதவி செய்யக்கூட அவரை நெருங் கமாட்டோம். இன்னும் சிலர் தொழு நோய்க்காரர்களைத் தெருவில் பிச்சை கூட எடுக்கவிடாமல் அடித்துவிரட்டுவர்.

அப்படி பிச்சை எடுக்கக்கூட அனுமதி மறுக்கப்பட்ட தொழுநோயாளிகளின் சூழ லைப் புரிந்துகொண்டு, அவர்களுக்காக வும் திட்டத்தை வகுத்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதுதான் தொழு நோய் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல் லங்கள். பிச்சைக்காரர்கள் போலவே தொழுநோயால் பீடிக்கப்பட்டு குடும்பத்தி னரால் கைவிடப்பட்டுத் தவித்துக் கொண் டிருந்தோருக்காகப் பிரத்யேக இல்லங் கள் உருவாக்கித் தந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

குறிப்பாக, தொழுநோயால் பீடிக்கப் பட்டு, கை, கால் உள்ளிட்ட உடலுறுப்பு கள் சிதிலமடைந்த பிச்சைக்காரர்கள் அந்த விடுதிகளில் அனுமதிக்கப்பட்டனர்.

முக்கியமாக, ஒவ்வொரு விடுதியிலும் மருத்துவ நிலையங்கள் அமைக்கப் பட்டு, தொழுநோய்க்குச் சிகிச்சை தரப்பட் டது. தொழுநோயிலிருந்து குணமடைந் தவர்கள் பிச்சை எடுக்க விரும்பாமல் வேறு தொழில் செய்ய விரும்பினால் விடுதியிலிருந்து வெளியேற அனுமதிக் கப்பட்டனர்.

செங்கல்பட்டு பரனூர் மறுவாழ்வு இல் லத்தில் தொழில் இயந்திரம் ஒன்றைத் தொடங்கிவைக்க வந்திருந்த அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, "தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வுத்திட்டம் போற்றத்தக்க மனிதநேயத் திட்டம்"



என்று பாராட்டினார். உண்மையில், பிச் சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் என்பது வெறும் மக்கள் நலத் திட்டம் மட்டுமல்ல, சக மனிதனின் சுயமரியாதையைக் காப் பாற்றும் திட்டமும்கூட. குரலற்றவர்களின் குரலாக ஒலித்ததோடு, அவர்களுக்கான சுயமரியாதையை உறுதிசெய்யும் குரலாகவும் ஒலித்திருந்தார் கலைஞர் அவர்கள்.

சில சொற்கள் வெல்லும், சில சொற்கள் கொல்லும் என்பார்கள். அதுபோல, வெண்குஷ்ட நோயால் பீடிக்கப்பட்ட வர்களுக்கு அந்த நோயைவிட அந்த நோய்க்கான பெயர் அதிகமான வலியை கொடுத்தது. குஷ்ட ரோகி என்ற சொல் அவர்களைக் கூனிக்குறுக வைத்தது. அவர்களது உள்ளக்குமுறலைப் புரிந்து கொண்டு, வெண் குஷ்டம் என்று சொல் வதற்குப் பதிலாக வெண்புள்ளி நோய் என்று அழைக்க வேண்டுமென அர சாணை வெளியிட்டார் அன்றைய முத லமைச்சர் கலைஞர் அவர்கள். குஷ்ட நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு அந்த உத்தரவு கொஞ்சம் நம்பிக்கையைக் கொடுத்தது.

### கண்ணொளி வழங்கும் திட்டம்!

ஒருவருக்குக் கண் பார்வை இல்லா மல் போனால் ஒட்டுமொத்த எதிர்கால மும் இருண்டுபோனதற்குச் சமம். அதை உணர்ந்தே எழுபதுகளில் இலவச கண்ணொளி வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்தார் முதலமைச்சர் கலை ஞர் அவர்கள். மருத்துவர்கள் குழு கிரா மம் கிராமமாகச் சென்று கேடராக்ட் உள் ளிட்ட கண் பிரச்சினை உள்ளவர்களை யும் பார்வை இழந்தவர்களைத் தேடிச் சென்று, அவர்களுக்கு அறுவை சிகிச்சை உள்ளிட்டவற்றைக் கொடுத்து அவர்களு டைய கண் பார்வையை மீட்டுத் தந்த னர்.

பெரியவர்களுக்கு மட்டுமின்றி, மாணவ மாணவிகளும் அந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர். அந்த வகையில் கண்ணொளி இழந்த பெரியவர்களுக் குக் கண்ணொளியை மீட்டுத்தந்ததோடு, கண்ணொளி இழந்த மாணவர்களுக் குக் கண்ணொளியோடு சேர்த்து கல்வி ஒளியையும் தருவதற்கு ஏற்பாடு செய் தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

### 'நெஞ்சுக்கு நீதி' சுயசரிதை வெளியீடு!

**இந்த இடத்தில் தனது சுயசரிதையான 'நெஞ்சுக்கு நீதி' புத்தகத்தின் முதல் பாக வெளியீட்டு விழாவை கலைஞர் அவர்கள் எப்படி நடத்தினார் என்று பார்க்கவேண் டும். அந்தப் புத்தக வெளியீட்டு விழாவுக் குத் தலைமை வகித்தவர் பார்வை மாற்றுத் திறனாளியும் தமிழ்நாடு விழியிழந்தோர் சங்கத் தலைவருமான ஆசிர். நல்லதம்பி. புத்தகத்தை வெளியிட்டவர் தொழுநோ யால் பீடிக்கப்பட்டு மீண்டு வந்தவரும் தொழு நோயாளிகள் மறுவாழ்வு சங்கத் தின் பொதுச்செயலாளருமான கவிஞர் முகமது அலி. புத்தகத்தின் முதல் பிரதி யைப் பெற்றுக்கொண்டவர் கால் பாதிப் பால் நடக்கும் சக்தியை இழந்த செல்வி சாந்தகுமாரி.**

சில திட்டங்கள் எல்லா மக்களையும் சென்றுசேரும். அது அவர்களுக்குத் தேவையாக இருக்கலாம் அல்லது தேவைப்படாமலும் போகலாம். ஆனால் சில திட்டங்கள் வெகு சிலரை மட்டுமே சென்றடையும். ஆனால் அது அவர்க ளுக்கு அதிமுக்கியமான ஒன்றாக இருக் கும். அப்படித்தான் அரசு ஊழியர் இறுதிச் சடங்கு நிதி என்ற பெயரில் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த திட்டம்.

தொடர்ச்சி 6ஆம் பக்கம்

# தமிழ்நாட்டை நீண்ட பல ஆண்டுகள் ஆட்சி செய்து

# எல்லோருக்கும் பலனளிக்கும் ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தியவர் கலைஞர்!

## ‘நியூஸ்-18 தமிழ்நாடு’ செய்திகள் தொலைக்காட்சி வெளியிட்ட சிறப்பு வீடியோ தொகுப்பு!

5ஆம் பக்கத் தொடர்ச்சி




### அரசு ஊழியர் இறுதிச் சடங்கு நிதி!

அரசு ஊழியர் ஒருவர் பணியிலிருக்கும்போது மரணம் அடைந்தால், அவருக்குரிய ஓய்வுதியம், வாரிசுக்கு வேலை உள்ளிட்ட எல்லாச் சலுகைகளும் முறைப்படி கிடைப்பதற்குக் கால அவகாசம் எடுக்கும். ஆனால் இறந்த அரசு ஊழியருக்கு இறுதிச்சடங்கு செய்வதற்குத் தேவையான நிதி அவரது குடும்பத்தினரிடம் இல்லாதபட்சத்தில் அது பெரும் சோகம். உடலை அடக்கம் செய்வதற்கு அடுத்தவரின் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும்.

அப்படியொரு நெருக்கடி அரசு ஊழியரின் குடும்பத்தினருக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக அரசு ஊழியர் இறுதிச் சடங்கு நிதி என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதன்படி அரசு ஊழியர் இறந்துவிட்டால், அவரது குடும்பத்தினருக்கு உடனடியாக ஐந்தாயிரம் ரூபாய் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அது பின்னாளில் கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட்டுவிட்டது என்றாலும் அதற்கு ஆரம்பப் புள்ளி வைத்தவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். வாழ்வின் யதார்த்தத்தைப் புரிந்து, நுட்பமாக யோசித்துக் கொண்டுவரப்பட்ட திட்டம் அது.

சமூகத்தின் நிலையை ஆட்சியாளர்கள் எந்தக் கண்ணாடி போட்டு அணுகுகிறார்கள் என்பதில்தான் அந்தச் சமூகத்துக்கான நீதி இருக்கிறது. அப்படி சமூகநீதிப் பார்வையுடன் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த திட்டம்தான் ஐம்பது வயதைக் கடந்தும் திருமணம் ஆகாமல், ஆதரவின்றி வறுமையில் வாடும் பெண்களுக்கான உதவித் தொகை. அவர்கள் எண்ணிக்கையில் வெகு சொற்பமாக இருப்பார்கள். ஆனாலும் அவர்களது வாழ்க்கை, எதிர்காலம் கருதி அவர்களுக்கான உதவித்தொகை திட்டத்தைக் கொண்டுவந்திருந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.




### டாக்டர் தர்மாம்பாள் நினைவு கைம்பெண்கள் மறுமண உதவித் திட்டம்!

கணவனை இழந்த பெண்கள் காலம் முழுக்க தனியாகவே வாழவேண்டும் என்பது காலம் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்ட மோசமான நடைமுறை. தவிரவும், அவர்களை அபசகுணமாகப் பார்ப்பதும், நல்ல காரியங்கள் நடக்கும்போது ஒதுக்கிவைப்பதும், நல்ல காரியங்கள் நடக்கும்போது தப்பித்தவறி எதிரில் வந்துவிட்டால் அவர்களை வசைபாடுவதும் எந்தவொரு குற்றவுணர்ச்சியும் இல்லாமல் புழக்கத்தில் இருந்தவை. ஒருவேளை, எதிர்காலம் கருதி அந்த விதவைகள் மறுமணம் செய்துகொள்ள எத்தனித்தால் அதற்கும் தடைக்கல்லைப் போட்டது பொதுச்சமூகம். சமூகத்தால் கண்டுகொள்ளப்படாதது ஒரு வகை என்றால் சமூகத்தால் முட்டுக்கட்டை போடப்படுவது மறுவகை.

ஆனால் அதைப் போன்ற மனித உரிமை மீறல், சமூகநீதிச் சுரண்டல் எதுவுமில்லை என்ற அடிப்படையில், விதவைத் திருமணங்களை ஊக்குவிக்கும் வகையில் புதிய நிதியுதவித் திட்டத்தைக் கொண்டுவந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். டாக்டர் தர்மாம்பாள் நினைவு கைம்பெண்கள் மறுமண உதவித்திட்டம் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டத்தின்படி பட்டப்படிப்பு படித்த பெண்களுக்கு 30000 ரூபாய் காசோலை 20000 ரூபாய் சேமிப்புப் பத்திரமும், மற்ற பெண்களுக்கு 15000 ரூபாய் காசோலை - 10000 ரூபாய் சேமிப்புப் பத்திரமும் வழங்கப்பட்டது.

### மாற்றுத் திறனாளிகள் நலவாரியம்!

ஊனமுற்றவர்கள் என்ற சொல் தொடர்ச்சியாகப் புழக்கத்தில் இருந்தபோதும், அது ஏற்படுத்திய மனக்காயம் மிகப் பெரியது. அதை உணர்ந்துகொண்ட முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஊனமுற்றோர் என்ற சொல்லுக்குப் பதிலாக மாற்றுத் திறனாளிகள் என்ற சொல்லைப் பயன்படுத்த சட்டரீதியான உத்தரவைப் பிறப்பித்தார். இயற்கையாகவோ, செயற்கையாகவோ அவர்கள் உடல்ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும், அதை ஈடுசெய்யக்கூடிய அளவுக்கு அவர்களுக்குள்ள மாற்றுத்திறன்களை அங்கீகரிக்கும் வகையில் பெயர் கொடுத்திருந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். மாற்றுத் திறனாளிகளுக்குப் பெரும் நம்பிக்கையையும் ஊக்கத்தையும் கொடுத்த உத்தரவு அது. முக்கியமாக, மாற்றுத்திறனாளிகளைக் கருணையோடு அணுகி, அவர்களுக்கான கண்ணியத்தை உறுதிசெய்திருந்தது அந்த உத்தரவு.

வெறுமனே பெயர் வைத்ததோடு நில்லாமல் மாற்றுத் திறனாளிகள் நலவாரியம் கொண்டுவர சட்டம் கொண்டுவந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். பிறகு மாற்றுத் திறனாளிகள் நலனுக்காகத் தனித்துறையே உருவாக்கப்பட்டது. அதன் நீட்சியாக சென்னைக்கு அருகில் மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய மையங்கள் உருவாக்கப்பட்டன. மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை வழங்கப்பட்டது.

மாற்றுத் திறனாளிகளுக்கான கல்விக் கடன்கள் ரத்து, திருமண நிதியுதவி, அரசுப் பேருந்தில் கட்டணச் சலுகை, அரசு ஊழியர்களாக உள்ள மாற்றுத் திறனாளிகளுக்குக் கூடுதல் பயணப் படி, இலவச மூன்று சக்கர வாகனம், வீட்டு வசதி வாரியம் - குடிசை மாற்று வாரியம், சமத்துவபுரத்தில் 3 சதவிகித வீடு ஒதுக்கீடு, மாற்றுத் திறனாளிகளின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை என மாற்றுத் திறனாளி களின் நலனை உறுதிசெய்யும் பல திட்டங்களைத் தமது ஆட்சியில் கொண்டுவந்தார் கலைஞர் அவர்கள்.

பேரறிஞர் அண்ணா கடிதங்கள் எழுதும்போது தம்பி என்றே அழைத்து எழுதுவார். ஆனால் கலைஞரின் கடிதங்கள் உடன்பிறப்பே என்றுதான் தொடங்கும். சற்று நுட்பமாகப் பார்த்தால் தம்பி என்ற சொல் ஆண்பாலுக்கு மட்டுமே உரியது. ஆனால் உடன்பிறப்பே என்ற சொல் ஆண்பால், பெண்பால், மாற்றுப்பால் என்ற முப்பாலுக்கும் பொருந்தக்கூடியது. ஆம், அண்ணனுக்கும் பொருந்தும், தம்பிக்கும் பொருந்தும், அக்காளுக்கும் பொருந்தும், தங்கைக்கும் பொருந்தும், திருநங்கைக்கும் பொருந்தும், திருநம்பி க்கும் பொருந்தும். அந்த வகையில் கலைஞர் அவர்கள் பயன்படுத்திய உடன்பிறப்பே என்றசொல்பாலினசமத்துவத்தின் குறியீடு.

### திருநங்கையர் நலவாரியம்!

அந்தப் பாலின சமத்துவத்தைக் குறியீடாக மட்டுமே வைத்திருப்பதைவிட செயல்வடிவத்துக்குக் கொண்டுவருவதுதான் சரியாக இருக்கும் என்ற அடிப்படையில் மாற்றுப் பாலினத்தவர்களின் பிரச்சினைகளைக் கையிலெடுத்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். உண்மையில், மாற்றுப் பாலினத்தவர்களைக் குறிப்பிடுவதற்கு சமூகத்தில் பயன்பாட்டில் இருந்த சில சொற்கள் மாற்றுப் பாலினத்தவர்களைக் கடும் மன உளைச்சலுக்கு ஆளாக்கின. ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சொல்லைப் பயன்படுத்துவார்கள். ஆனால் எந்த ஒன்றுமே அவர்களுக்குரிய கண்ணியத்தை உறுதி செய்யவில்லை. மாறாக, அவர்களைக் காயப்படுத்தவே செய்தன.

காலம் காலமாகப் புழக்கத்தில் இருந்தபடி மாற்றுப் பாலினத்தவர்களின் சுயமரியாதையைச் சீண்டிவந்த அந்த சொற்களை அடியோடு நீக்கிவிட்டு, திருநங்கையர் என்ற புதிய சொல்லைச் சட்டரீதியாகப் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அடுத்து தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறையின் கீழ் திருநங்கையர் நலவாரியத்தை உருவாக்கினார். மாற்றுப் பாலினத்தவர்களின் உரிமைகளை அங்கீகரித்து, அவர்களது சுயமரியாதை உறுதிசெய்து, அவர்களுக்கான நலத்திட்டங்களை உருவாக்கும் பொறுப்பை திருநங்கையர் நலவாரியத்துக்குக் கொடுத்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

அதன்படி திருநங்கையருக்கு அடையாள அட்டை, குடும்ப அட்டை, தொகுப்பு வீடு, மருத்துவக் காப்பீடு அட்டை, சுய உதவிக்குழுக்கள், இலவச அறுவை சிகிச்சை, சுய தொழில் தொடங்க நிதியுதவி என்று மாற்றுப் பாலினத்தவர்களின் பாதுகாப்பு தொடங்கி வாழ்வாதாரம் வரை அனைத்துக்குமான திட்டங்கள் தி.மு.க. ஆட்சியில் செய்யப்பட்டன.

தமிழ்நாட்டில் இவையெல்லாம் நடந்து பல ஆண்டுகள் கழித்தே உச்சநீதி

## உச்சநீதிமன்றம் தீர்ப்பு வெளியிடுவதற்கு அரை நூற்றாண்டுக்கு முன்னரேயே, இரவலர் மறுவாழ்வுத் திட்டத்திற்குச் செயல்வடிவம் தந்தவர் கலைஞர்!

மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு ஒன்றில் திருநங்கைகளைப் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகக் கருத வேண்டும், அவர்களை மூன்றாம் பாலினத்தவர்களாக அங்கீகரிக்க வேண்டும், பேருந்து நிலையம் - ரயில் நிலையம் உள்ளிட்ட பொது இடங்களில் திருநங்கையர்களுக்குப் பிரத்யேக கழிவறைகள் ஏற்பாடு செய்யவேண்டும் என்பன போன்ற உத்தரவுகளைப் பிறப்பித்தது உச்சநீதிமன்றம்.

### விளையாட்டு வீராங்கனையை அங்கீகரித்த கலைஞர்!

இந்த இடத்தில் பாலின சர்ச்சையில் சிக்கிய விளையாட்டு வீராங்கனை சாந்தியை முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள். அங்கீகரித்த விதத்தைக் குறிப்பிடவேண்டும். 2006ல் கத்தாரில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் 800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப் பதக்கம் வென்றார் புதுக்கோட்டை சாந்தி. பிறகு அவருக்கு நடத்தப்பட்ட பாலின சோதனையின் முடிவு எதிர்மறையாக வந்ததால், அவரது பதக்கம் பறிக்கப்பட்டதோடு, அவர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கத் தடையும் விதிக்கப்பட்டது.

ஆனால் அந்தத் தடை விதிக்கப்படுவதற்கு முன்பே புதுக்கோட்டை சாந்திக்கு 15 லட்சம் ரூபாய் நிதியும், ஒரு லட்சம் ரூபாய் மதிப்பு கொண்ட தொலைக்காட்சியும் பரிசாகக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதன்பிறகு சர்ச்சைகள் வெடித்தபோதும் தனது முடிவை முதலமைச்சர் மாற்றிக்கொள்ளாமல், பந்தயத்தில் ஓடியது இந்தக் கால்கள்தானே என்று சொல்லி தமிழ்நாடு அரசின் சார்பில் சாந்திக்குப் பரிசுகள் கொடுத்தனுப்பினார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

### நரிக்குறவர்கள் நல வாரியம்!

சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள் வரிசையில் நரிக்குறவர்கள் முக்கிய மானவர்கள். அவர்கள் தெருவில் சென்றால் அவர்களை அருவருப்பாகப் பார்ப்பதும், அடித்து விரட்டுவதும், வசைபாடித் துரத்துவதும் தொடர்கதையாக இருந்தது. குருவி சுடும் துப்பாக்கியோடும், ஊசி மணி பாசி மணியோடும், நரிக்கொம்புகளோடும், வசிப்பதற்கு வாழ்விடமில்லாமல் நாடோடிகளாகத் திரிந்த அவர்களுடைய நிலையை மாற்றும் முயற்சியில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இறங்கினார். குறிப்பாக, எழுத்தாளர் ரவிக்குமார் உள்ளிட்டோர் அவர்களது பிரச்சினைகளின் தன்மையை அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

2008ல் ஆட்சியில் இருந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு நரிக்குறவர்கள் நல வாரியத்தை உருவாக்கினார். நரிக்குறவர்களை நல்ல நெறிக்குறவர்கள் என்று அழைத்து, அவர்கள் பல்வேறு இடங்களுக்கும் அலைந்து திரியாமல், ஓரிடத்தில் வாழ வேண்டும் என்பதற்காகக் குடியிருப்புகள் அமைத்துத் தரப்படும் என்று அறிவித்தார். அந்த வகையில் சமூகத்தால் அவமதிக்கப்பட்டு, அரசாங்கத்தால் கண்டுகொள்ளப்படாமல் இருந்த நரிக்குறவர்களின் வாழ்வில் நல்ல மாற்றங்களைக் கொண்டுவந்தது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த நரிக் குறவர்கள் நல வாரியம்.



### நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்!

சமூகத்தாலும் அரசாங்கத்தாலும் அதிகம் கண்டுகொள்ளப்படாதவர்கள் பட்டியலில் நாட்டுப்புறக் கலைஞர்களும் அடக்கம். வெள்ளித்திரையும் வண்ணத் திரையும் சின்னத்திரையு ம்தான் பொழுதுபோக்கு என்று மாறிவிட்ட உலகில், நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாப்பதும் நலிந்து போன நாட்டுப்புறக் கலைஞர்களைப் பாதுகாப்பதும் முக்கிய மானது என்பதை ஓர் ஆட்சியாளராக மட்டுமின்றி, ஒரு கலைஞராகவும் உளமாற உணர்ந்தவர் கலைஞர் அவர்கள். அதன் நீட்சியாகவே நாட்டுப்புறக் கலையும் கலைஞர்களும் அழிந்துவிடாமல் தடுப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தைக் கொண்டுவந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.



அறுபது வயதை எட்டிய நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு மாத ஓய்வூதியம், மரணமடைந்த நாட்டுப்புறக் கலைஞர்களுக்கான இறுதிச்சடங்கு நிதியுதவி மற்றும் வாரிசுக்கான நிதியுதவி, நாட்டுப்புறக் கலைஞர்களின் பிள்ளைகளுக்கான கல்வி உதவி, நாட்டுப்புறக் கலைஞர்களின் பிள்ளைகளுக்கான திருமண நிதியுதவி, பெண் கலைஞர்களுக்கான மகப்பேறு உதவி என்று பல்வேறு உதவி களைச் செய்துகொடுத்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

### துப்புறவுப் பணியாளர்கள் நல வாரியம்!

அருவருப்புடன் பார்க்கப்பட்டு அலட்சியமாக அணுகப்பட்டோர் பட்டியலில் துப்புரவுப் பணியாளர்கள் என்கிற தூய்மைப் பணியாளர்களும் உண்டு. நாம் அன்றாடம் புழங்குகின்ற தெருக்கள், சாலைகள் தொடங்கி நம்முடைய சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்து, நாம் சுகாதாரத்துடன் வாழ்வதற்கு ஆதாரமாக இருப்பவர்கள் தூய்மைப்பணியாளர்கள். கழிவுநீர் பிரச்சினை தொடங்கி கழிப்பறை பிரச்சினை வரை நாம் நாடுவது தூய்மைப் பணியாளர்கள்தான். ஆனால் அவர்களைச் சமூகம் அணுகும் விதமும் சரி, அழைக்கும் விதமும் சரி. மனிதத்தன்மைக்கு எதிரானது.

சாதிப்பெயர் சொல்லி அழைப்பது தொடங்கி கெட்டுப்போன உணவுப்பொருட்களைக் கொடுப்பது வரை சமூகம் அவர்களை அனுமதிப்பது தொடர்கதையாகவே இருந்தது. அசுத்தத்தைச் சரி செய்யும் பணியில் தம்மையே அசுத்தமாக்கிக்கொள்ளும் தூய்மைப் பணியாளர்களுக்காக 2007-ல் தமிழ்நாடு துப்புரவுப் பணியாளர்கள் நலவாரியத்தைக் கொண்டுவந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதன்மூலம் அவர்களுக்கு முறையான அடையாள அட்டையை ஏற்பாடு செய்து, விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு உதவித்தொகை, இறுதிச்சடங்கு உதவித்தொகை, கல்வி - திருமண உதவித்தொகை, ஓய்வூதியம் என்று பல்வேறு உதவிகள் கிடைப்பதற்கு வழிவகை செய்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

### எல்லோருக்கும் பலனளிக்கும் திட்டங்கள்!

1969 ஆம் ஆண்டு தொடங்கி 2011 வரை வெவ்வேறு காலகட்டங்களில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்திருக்கிறார். ஐந்து முறை ஆட்சி செய்திருக்கிறார். தமிழ்நாட்டை அதிக ஆண்டுகளுக்கு ஆட்சி செய்தவரும் அவரே. அந்த ஆட்சிக்காலங்களில் எல்லாம் ஏராளமான திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார். பெண்கள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், கிராமங்கள், நகரங்கள், ஏழைகள் என்று எல்லோருக்கும் பலனளிக்கும் பல திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறார்.

கைரிக்ஷாவை ஒழித்தது, இலவச கண்ணொளி, குடிசை மாற்று வாரியம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், பெண்ணுக்குச் சொத்துரிமை, ஏழைப் பெண்கள் திருமண உதவித்திட்டம், இலவச ஆம்புலன்ஸ் சேவை, உழவர் சந்தை, சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், கலைஞர் காப்பீட்டுத் திட்டம், சமச்சீர் கல்வித்திட்டம் என்று எத்தனையோ திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். ஆனால் குரலற்றவர்களின் குரலாக ஒலித்து கலைஞர் அவர்கள் கொண்டுவந்த திட்டங்கள் ஒவ்வொன்றும் சமூகநீதிக்கான சமகால சாட்சியங்கள்!

**நன்றி: ‘நியூஸ்-18 தமிழ்நாடு’**



கலைஞர் 100
1924 - 2023
நாள் : 16.10.2023. திங்கட்கிழமை
நேரம் : காலை 10.00 மணி முதல்
மாலை. 4.00 மணி வரை
இடம் : அண்ணா நூற்றாண்டு நூலகம்,
கோட்டூர்புரம், சென்னை 25.
வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய
விழிப்புணர்வு நிகழ்ச்சி
...தலைமை...
மாண்புமிகு செஞ்சி K.S.மஸ்தான்
சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
மாவட்ட கழக செயலாளர்
...முன்னிலை...
மாண்புமிகு மா. சுப்பிரமணியன்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
நிகழ்ச்சியை தொடங்கி வைப்பவர்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
...வாழ்த்துரை...
முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன்
தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
திருமதி. R.பிரியா ராஜன்
சென்னை மாநகராட்சி மேயர்
திரு. M.மகேஷ்குமார்
சென்னை மாநகராட்சி துணை மேயர்
இங்ஙனம்
அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மற்றும்
தமிழ்நாடு செவிலியர் குழுமம்.



வணிகவரித்துறை - சமாதானத் திட்டம்.
தொடக்க நாள்: 16-10-2023
கலைஞர் 100 1924 - 2023
• இதுவரை தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவிலான சலுகைகளுடன் கூடிய சமாதானத் திட்டம் நமது வணிகர்களுக்கான முத்தான திட்டம்.
• ஒரு மதிப்பீட்டு ஆண்டில் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு குறைவாக வரி, அதற்கான வட்டி மற்றும் அபராதம் நிலுவையில் உள்ள 95,000 எளிய வணிகர்களுக்கு மொத்தத் தொகையும் முழுமையாக தள்ளுபடி.
• வரி நிலுவைக்காக பிணைக்கப்பட்டிருக்கும் வணிகர்களது 1002 அசையா சொத்துக்கள் திட்டத்தின் முதல் நாளே பிணைப்பில் இருந்து விடுவிப்பு.
• 47,067 வணிகர்களின் 13,362 கோடி ரூபாய் வரி, வட்டி, அபராதம் ஆகியவை நிலுவைக் கணக்கிலிருந்து நேரடித் தள்ளுபடி. சலுகைகளுடன் மீதித் தொகையை செலுத்தி நீண்டநாள் நிலுவையில் இருந்து வெளியே வரலாம்.
• சமாதானத் திட்டம் நடைமுறையில் இருக்கும் 16.10.2023 முதல் 15.2.2024 வரையிலான காலம் நமது வணிகர்களுக்கு நல்வாய்ப்பு காலம்.
வணிகர் சங்கங்களின் மாநாடு, திருச்சி
தமிழ்நாடு வரலாற்றில் முதன்முறையாக வணிகர்களின் நலத்திற்காக இதுவரை இல்லாத அளவிற்கு பல சலுகைகளை வாரி வழங்கிய
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
அவர்களுக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!!
இவண் :-
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்
மதுரை வடக்கு மாவட்ட செயலாளர்


ரூ.7000 கோடி
தள்ளுபடி கேட்ட
விவசாயிகள்
சர்வத்தையும் விட்டு
நிர்வாணமாக நின்ற போதும்
கர்வத்தோடு இருந்தோர் மத்தியில்
ஓடி ஆடி காலடி தேய,
உழைப்பவரடி ஓய்வு தேடிட
வணிக வரி, வட்டி, அபராதத் தொகை
என முழு தொகையாக
95,502 வர்த்தகர்கள் உள்பட
1,42,569 குடும்பங்களுக்கு
இந்தியாவிலே முதன்முறையாக
ரூ.20,000 கோடி தள்ளுபடி தந்து
வணிகத்தையும்
வர்த்தகர்களையும் உயர்த்திட்ட
திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலின்
அவர்களின் பொன்னடிக்கு
வர்த்தகர்களின் நன்றி கலந்த
வணக்கம் கோடானகோடி...
கவிஞர் காசி.முத்துமாணிக்கம் – செயலாளர்
தி.மு.கழக வர்த்தகர் அணி
South digital
9840100489

# மகளிர் உரிமை மாநாட்டின் எழிலார்ந்த காட்சிகள்!





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (14.10.2023) சென்னை. நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக மகளிர் அணி ஒருங்கிணைப்பில் நடைபெற்ற மகளிர் உரிமை மாநாட்டில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் திருமதி, சோனியா காந்தி அவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையினை நினைவுப் பரிசாக வழங்கினார். இதேபோன்று மாநாட்டில் பங்கேற்ற முன்னணி மகளிர் தலைவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையினை நினைவுப்பரிசாக வழங்கினார்.




மகளிர் உரிமை மாநாட்டில் திரண்ட மகளிர் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் – திருமதி சோனியா காந்தி – கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்டோர் பங்கேற்றக் காட்சி.



மகளிர் உரிமை மாநாட்டில் அரங்கமே கொள்ளாத அளவிற்கு பல்லாயிரக்கணக்கில் திரண்ட மகளிரை காணீர்.

தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவிலேயே முன்னிலையில் இருப்பதற்கு - பெண்கள் முன்னேற்றத்துக்கு பெரியார் - அண்ணா - கலைஞர் .அமைத்துக் கொடுத்த அடித்தளமே காரணம்!

# மகளிர் உரிமை - சமத்துவத்திற்காகக் குரல் கொடுத்த, பாடுபட்ட கலைஞரைப் போற்ற வேண்டும்!

## மகளிர் உரிமை மாநாட்டில் - அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி பேச்சு!

**சென்னை, அக். 16-**

**சென்னையில், நேற்று முன்தினம் (அக். 14) மாலை, கழக மகளிர் அணி சார்பில் பிரம்மாண்டமாக நடைபெற்ற, "மகளிர் உரிமை மாநாட்டில்" கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி அவர்கள், இந்தியாவிலேயே "தமிழ்நாடு இன்றைக்கு முன்னிலையில் இருப்பதற்கு, பெண்கள் முன்னேற்றத்துக்காக பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் அமைத்துக் கொடுத்த அடித்தளமே காரணம்" என்றும் "மகளிர் உரிமை, சமத்துவத்திற்காகக் குரல் கொடுத்த, பாடுபட்ட கலைஞர் அவர்களைப் போற்ற வேண்டும்!" என்று குறிப்பிட்டார்.**

இம்மாநாட்டில் பிரியங்கா காந்தி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

"மகளிர் உரிமை மாநாட்டில் பங்கேற்கும் அரிய வாய்ப்பை மிகுந்த பெருமையாகவும் அங்கீகாரமாகவும் நான் கருதுகிறேன் அதோடு பல்வேறு சிறப்புகள் கொண்ட தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஒட்டி இந்த சிறப்பு மாநாட்டில் உங்களையெல்லாம் சந்திப்பது எனக்கு நிறைவைத் தருவதாகும்."

### தமிழக மகளிரின் மனதை நான் உணர்ந்தேன்!

ஏறத்தாழ 32 ஆண்டுகளுக்கு முன்பாக சென்னை வருகை தந்த நாள் என் வாழ்வில் மறக்க முடியாதது ; நினைவை விட்டு நீங்காதது. 19 வயதான நானும், எனது தாயார் சோனியா காந்தியும் விமானத்தில் சென்னைக்கு இரவில் வந்தடைந்தோம். எங்களை இருள்தான் வரவேற்றது. ஆனால், எதைப்பற்றியும் நினைக்கவோ ; சஞ்சலப்படவோ என் மனதில் இடமில்லை. ஏனென்றால் சில மணி நேரத்திற்கு முன்புதான் எங்களால் இன்னமும் மறக்கமுடியாத கொடும் சம்பவம் அரங்கேறியிருந்தது; தமிழகத்திற்கு வந்த என் தந்தை ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட துயரச்சம்பவம் அது.

விமானத்திலிருந்து என் தாயுடன் எதுவும் பேசமுடியாமல் இதயக் குமுறலோடு வெளியில் நடந்தோம். மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து வந்தபோது தனிமையை உணர்ந்தோம்; அப்போது அங்கு பணியாற்றும் நீலநிற சேலையணிந்த பெண்கள் எங்களைச் சூழ்ந்துகொண்டனர். அவர்கள் என் தாயாரின் கையைப் பிடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதபடி ஆறுதல் கூறினர். "எங்களின் அன்புக்குரிய ராஜீவ் காந்தியை இழந்துவிட்டோமே" என்று அந்தப் பெண்கள் வேதனையோடு புலம்பியது, இன்னும் என் காதில் ஒலிக்கிறது. கலங்கிய கண்களோடு இருந்த அந்தப் பெண்களின் உணர்வு என்னை நேசிக்க வைத்தது. தமிழக மகளிரின் மன உணர்வை நான் உணர்ந்தேன் அப்போது.

தமிழகப் பெண்கள் காட்டிய அந்த அன்பின் வெளிப்பாடு சொற்களால் விளக்க முடியாதது. மனதை விட்டு நீங்கவும் செய்யாது. தமிழக மகளிரே ! நீங்கள் தான் எனது அம்மா : எனது சகோதரிகள் ஆவீர்கள். இந்த மாநாட்டில் உங்களோடு நான் இருப்பதை பெருமையாக நினைக்கிறேன்.

சகோதரிகளே! நாம் செல்வந்தர்கள் அல்லது வறியவர்கள் என்ற ஒப்பீடு எல்லாம் அவசியமில்லை. எங்கு வசிக்கிறோம் என்பது முக்கிய மில்லை. எவ்வளவு படித்தோம் என்பதும் கருதத்தக்கதல்ல. எத்தகைய சந்தர்ப்பங்களை நாம்



எதிர்கொண்டோம் என்பதும் கணக்கல்ல. நாம் நமது குடும்பத்தின் அடித்தளம் ஆவோம்.

### மகளிரின் உந்து சக்தியே நாட்டின் எதிர்காலம்!

ஒரு கட்டிடம் உருவாக செங்கற்களை அடுக்கி வடிவம் கொடுப்பது போல, நாம் ஒருங்கிணைந்து இந்தச் சமூகத்தைத் தாங்கிப் பிடிக்கிறோம். இதை மன உறுதியோடு நாம் மேற்கொள்கிறோம். தலைமுறை தலைமுறையாக நம்முடைய மேலான இயல்புகளால் உரமூட்டி தொலைநோக்கோடு செயல்படுவது பெருமையாகும். நாட்டின் எதிர்காலத்தை பிரகாசிக்க செய்யும் விதத்தில் கோடான கோடி மகளிரின் உந்து சக்தி உள்ளது.

நாம் அன்பைப் போதிக்கிறோம். நம் குழந்தைகளுக்கு நல் இயல்புகளை போதித்து உருவாக்கி வருகிறோம். இருளிலிருந்து வெளிச்சத்தை நோக்கி நாம் பயணப்படும் காலம் இது. நாம் ஒவ்வொருவரும் பிரகாசமான எதிர்காலம் என்ற விளக்கை ஏந்தி, சூரிய ஒளியின் பின்னணி போலக் கொண்டு நாம் பயணப்படுகிறோம்.

### பெண் ஏன் அடிமையானாள்?

வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ் மண்ணிலிருந்து தந்தை பெரியார், "பெண் ஏன் அடிமையானாள்?" என்ற வினாவோடு புத்தகத்தை எழுதினார். தமிழகம் சமூக மாற்றத்திற்கான புரட்சியைத் துவக்கத் தூண்டிய இடம். அப்படி சமூக மாற்றவித்தை தமிழகத்தில் விதைத்த தந்தை பெரியார், சமூக ஏற்றத்தாழ்வுகள் பொருளாதார முரண்பாடுகளால் பெண்கள் அடிமை நிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி அதிகமாக பேசினார், எழுதினார். அவர் எழுப்பிய கேள்வி இன்னமும் அப்படியே நீடிக்கிறது.

சமூக மாற்றத்திற்கான புரட்சி தோன்றிய தமிழகத்திலிருந்து மகளிர் உரிமைக்காகக் குரல் கொடுக்கிறோம். அவர்தான் தமிழகத்தில் மகளிர் மேம்பாட்டிற்கான தூண்டு தல் வேட்கையை உருவாக்கியவர். எத்தனையோ ஆண்டுகள் கடந்தாலும் இன்னும் மகளிர் சமத்துவம் பெறவில்லை, அடிமை நிலை நீடிக்கிறது என்ற வினா எழுப்பும் சூழ்நிலைதான் இன்னும் நீடிக்கிறது. இன்னும் பெண்களின் அதிகாரம் பறிக்கப்படும் நிலைமை உள்ளது.

### மாற்றத்தை நோக்கி நமது உழைப்பு இருக்க வேண்டும்!

இந்திய மக்கள் தொகையில் மகளிர் எண்ணிக்கை மிக அதிகம். அவர்கள் இந்த நாட்டின் தூண்கள். ஆனால் அவர்கள் இன்னும் சமத்துவத்தை எட்டவில்லை. இதற்காக நாம் காத்திருக்க வேண்டிய காலம் இனி இருக்கக்கூடாது. முழுமையான சமத்துவமே நமது இலக்காக இருக்க வேண்டும். மாற்றத்தை நோக்கி நம் உழைப்பு இருக்க வேண்டும். அதற்கான காலகட்டம் இது. அதுவே உரிமை மாநாடாக இங்கே நடைபெறுகிறது. இந்தத் தருணத்தில் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகள் குறைந்ததா என்பதை நினைக்காமல் இருக்க முடியவில்லை. அவர்களுக்கு எதிரான போக்கு, அடக்கு முறை, அதிகாரப்பறிப்பு இன்னும் நீடிப்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமக்கு நாமே பாதுகாப்பு, நமக்கு நாமே கவசம் என்ற சிந்தனையோடு பெண்கள் தங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். நாம் இவற்றை எல்லாம் கடந்து வந்தாலும், துணிச்சலாக எதிர்கொண்டாலும், நம்மைச் சமத்துவம் மிக்கவர்களாக உருவாக்க காலம் கனிய வேண்டும்.

> **ச**மூக மாற்றத்திற்கான புரட்சி தோன்றிய தமிழ்நாட்டிலிருந்து – இன்று மகளிர் உரிமைக்காகக் குரல் கொடுக்கிறோம்! கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெறும் இம்மகளிர் மாநாட்டில் கலந்து கொள்வது எனக்கு மிகுந்த மனநிறைவைத் தருகிறது!

### நமது உரிமையை மீட்டெடுப்போம்!

எந்தவிதப் பாகுபாட்டையும் நாம் ஏற்கக் கூடாது , அனுமதிக்கக்கூடாது , அர்ப்பணிப்பு உணர்வோடு நம் செயல்பாடு இருக்க வேண்டும். நாம் நமது உரிமைய மீட்டெடுப்போம். நமது முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றத்திற்குத் துணையாய் அமையும். அதற்கான அடித்தளத்தை பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் அமைத்துச் சென்றுள்ளனர். இந்தப் பின்னணியால் தமிழகம் இந்தியாவில் முன்னிலையில் உள்ளது. ஆனாலும், பெண் ஏன் அடிமை என்ற கேள்விக்கு இன்னும் முழுமையான விடை இல்லை. இதற்கான சரியான பதில் நாம் நமது உரிமையைப் பெற்று வாழ்வில் மாற்றத்தைக் காணவேண்டும். இத்தகைய அணுகுமுறை குறித்து இப்போது அதிகமாகப் பேசப்படுகிறது இதை அரசியல் கட்சிகளும் உணர்ந்துள்ளன ; பேசியும் வருகின்றன.

### பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் விடை காண வேண்டிய நேரம் இது!

ஆனாலும், நமக்கு உரிய உரிமையைத் தருவதில் இன்னும் முழுமையான அக்கறை வரவில்லை என்றே கருத வேண்டியுள்ளது. அதனால் சகோதரிகளே! நாம் நமது உரிமைக்காகக் குரல் கொடுப்போம். பெண்களுக்கான இட ஒதுக்கீடு சட்டத்தை உடனே அமுல்படுத்துவது காலத்தின் கட்டாயம். அரசியலில் ஒரு அங்கமாக நம்மைக் கருதி நமது மேம்பாட்டிற்கு வழி வகுக்கும் அந்தச் சட்டம். நம் மதிப்பை உணரவைக்கும். நமது பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. அதற்கு நாம் விடை காண வேண்டிய நேரம் வந்துவிட்டது. நமது கூட்டு உறவே அதற்கான வெற்றியைக் கொண்டுவரும். ஒவ்வொரு மகளிருக்கும் தங்கள் உரிமையைக் கோருவதற்கான அங்கீகாரம் உண்டு.

### உரிமைக்காக குரல் கொடுப்போம்!

எங்கே எந்தச் சூழலில் நீங்கள் இருந்தாலும் ஒருவருக்கு ஒருவர் உதவும் பண்பு சகோதரப் பாசம், ஒவருக்கு ஒருவர் என்ற ஒருங்கிணைப்பு நம்மை உயர் மதிப்பீடு கொண்டவர்களாக நினைக்கும், இதுவே வெல்லும்.

நாம் ஒருங்கிணைந்தால் நம்மை மிஞ்ச யாருமில்லை. மாற்றத்திற்கான தருணமாக இதை நாம் நினைக்கும் வேளையில், மகளிர் உரிமை சமத்துவதிற்காக குரல் கொடுத்த தலைவர் கலைஞரைப் போற்ற வேண்டும். விழிப்போடு மகளிர் உரிமைக்காக்கக் குரல் கொடுப்போம், ஒளிமயமான எதிர்காலம் காண்போம்.

இவ்வாறு பிரியங்கா காந்தி பேசினார்.





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15/10/2023) செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரை சாலை, உத்தண்டி அருகே கானாத்தூர் ரெட்டிக்குப்பத்தில் (மாயாஜால்முன்புறம்) நடைபெற்ற,ஹெச். சி. எல் நிறுவனம் , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனம் இணைந்து நடத்திய மாபெரும் சைக்ளோத்தான் போட்டியினை(HCL, SDAT & CFI) குறு,சிறு மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் ஜே மேகநாத ரெட்டி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர. ராகுல்நாத் தாம்பரம் காவல் துணை ஆணையர் பவன்குமார் ரெட்டி, தாம்பரம் இணை ஆணையர் மூர்த்தி, ஹெச்.சி. எல் நிறுவனத் தலைவர் (வியூகம்), சுந்தர் மகாலிங்கம், அரசு அலுவலர்கள்மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15/10/2023) செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரை சாலை, உத்தண்டி அருகே கானாத்தூர் ரெட்டிக்குப்பத்தில் (மாயாஜால்முன்புறம்) நடைபெற்ற,ஹெச். சி. எல் நிறுவனம் , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனம் இணைந்து நடத்திய மாபெரும் சைக்ளோத்தன் போட்டியினை(HCL, SDAT & CFI) குறு,சிறு மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் ஜே மேகநாத ரெட்டி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர. ராகுல்நாத் தாம்பரம் காவல் துணை ஆணையர் பவன்குமார் ரெட்டி, தாம்பரம் இணை ஆணையர் மூர்த்தி, ஹெச்.சி. எல் நிறுவனத் தலைவர் (வியூகம்), சுந்தர் மகாலிங்கம், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.

### செங்கல்பட்டு மாவட்டம் - கிழக்கு கடற்கரை சாலை - உத்தண்டி அருகே கானாத்தூர் ரெட்டிக்குப்பத்தில்

# மாபெரும் சைக்ளோத்தான் போட்டி!

## இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

செங்கல்பட்டு, அக்.16-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15/10/2023) செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரை சாலை, உத்தண்டி அருகே கானாத்தூர் ரெட்டிக்குப்பத்தில் (மாயாஜால்முன்புறம்) நடைபெற்ற, ஹெச். சி. எல் நிறுவனம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனம் இணைந்து நடத்திய மாபெரும் சைக்ளோத்தான் போட்டியினை (HCL, SDAT & CFI) கொடியசைத்து தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

அதன் விபரம் வருமாறு:-

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனத்தின் ஒத்துழைப்புடன் மாபெரும் சைக்ளோத்தன் போட்டி செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரை சாலை, உத்தண்டி அருகே கானாத்தூர்ரெட்டிக்குப்பத்தில்மாயாஜால்முன்புறம்) நேற்று (15.10.2023) நடைபெற்றது.

இந்தப் போட்டி 55கிமீ, 23கிமீ மற்றும் 15கிமீ ஆகிய மூன்று பிரிவுகளில் நடைபெற்றது. இதில் 1100க்கும் (956 ஆண்கள் மற்றும் 169 பெண்கள்) மேற்பட்ட சைக்ளிங் வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சி, தொழில்முறை மற்றும் அமெச்சூர் ஆகிய இரு பிரிவுகளிலும் பங்கேற்பாளர்களை கொண்டது. இந்த போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு, தொழில் வல்லுநர்களுக்கு ரூபாய்.15 லட்சம் மற்றும் அமெச்சூர்களுக்கு ரூபாய் 15 லட்சம் என ரூபாய் 30 லட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15/10/2023) ஹெச். சி. எல் சைக்ளோத்தான் போட்டியினை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்து வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டுமேம்பாட்டுஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர. ராகுல்நாத் தாம்பரம் காவல் துணை ஆணையர் பவன்குமார் ரெட்டி, தாம்பரம் இணை ஆணையர் மூர்த்தி, ஹெச்.சி. எல் நிறுவனத் தலைவர், சுந்தர் மகாலிங்கம், ஆசிய சைக்கிள் ஓட்டுதல் கூட்டமைப்புத் தலைவர் ஓன்கர் சிங், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், உத்தரபிரதேச மாநிலம் நொய்டாவில் நடைபெற்ற முதல் எச்.சி.எல் சைக்ளோத்தான் போட்டியில் 1000க்கும் மேற்பட்ட சைக்கிள் ஓட்டுநர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று சென்னையில் நடைபெற்ற போட்டி இரண்டாவது பதிப்பாகும்.

### பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை

# முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்!

## திருவரங்கத்தில் - அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

புதுக்கோட்டை அக்.16-

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அம்பாள் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி தொகைக்கான காசோலைகளை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 13.10.2023 அன்று வழங்கினார்.

பின்னர் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் பெண்களின் முன்னே ற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க போன்ற முக்கிய தி ட்டங்களைச் செயல்படுத்தி எண்ணற்ற ஏழை எளிய நடுத்தர மக்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்களுக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டு, அதன் மூலம் பெண்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதற்கு வழிவகை ஏற்படுத்தியுள் ளார்கள்.

மேலும் மாவட்டத்தில் முன்னேற்றம் நாடும் வட்டாரங்களை தேர்வு செய்து, அந்த வட்டாரங்களின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டத்தில் முன்னேற்ற நாடும் வட்டாரமாக திருவரங்குளம் வட்டாரம் தேர்வு செய்யப்பட்டு பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அம்பாள் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 2 ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு களுக்கு தலா ரூ.50 லட்சம் வீதம் ரூ.1. கோடி மதிப்பிலான கடனுதவி தொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 40 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.2.20 கோடி மதிப்பிலான கடனுதவி தொகைக்கான காசோலைகள் என மொத்தம் ரூ.3.20 கோடி மதிப்பிலான கடனுதவி தொகைக்கான காசோலைகள் இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்கள் இந்த கடனுதவிகளை பெற்று சொந்தமாக வேலைவாய்ப்பை உருவாக்க முடிகிறது. இதன்மூலம் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது.

இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களானது முறையான வருவாயை ஈட்டித்தருவதன் மூலம் சிரமமின்றி வாழ்வதற்கு உறுதுணையாக அமைகிறது. இந்த கடனுதவிகளை பெறும் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் இதனை தங்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

எனவே தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்டங்களை பயனாளிகள் உரிய முறையில் பெற்று பயன் பெற வேண்டும்.

இவ்வாறு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

பின்னர் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் இத்திட்டம் குறித்த பல்வேறு விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் மற்றும் சிறப்பாகச் செயல்பட்ட அரசு அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, உதவி திட்ட அலுவலர்கள் தில்லைமணி, சசிகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர் கோகுலகிருஷ்ணன், ஆயிஷாராணி, கே.எம்.சுப்பிரமணியன், அரு.வடிவேல், க.நைனாமுகம்மது, எம்.எம்.பாலு, கணபதி, டி.எம்.ஆர், ராமமூர்த்தி, மேல விடுதி ஆறுமுகம், எம்.சுந்தரம், விஜயத்குமார், கனரா மற்றும் பாரத வங்கி மேலாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### தரணிதரன் – நவநீத கிருஷ்ணன் பங்கேற்பு!

# பொள்ளாச்சியில் ஆதி திராவிடர் நலக்குழு ஆலோசனைக் கூட்டம்!

## தளபதி முருகேசன் - திப்பம்பட்டி ஆறுச்சாமி சிறப்புரை!

பொள்ளாச்சி, 16 –

பொள்ளாச்சி நகரக் கழக அலுவலகத்தில் கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அறிமுக கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில இணைச்செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் மாநில தகவல் தொழில்நுட்ப இணைச் செயலாளரும் பொள்ளாச்சி தொகுதி பொறுப்பாளருமான தரணிதரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பொள்ளாச்சி நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன் நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர் ஞானசேகரன் வருகை தந்த அனைவரையும் வரவேற்றன. கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்டத் தலைவர் சீரபாளையம் செந்தில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் சூலூர் சண்முகம் வால்பாறை ரவிச்சந்திரன் பொள்ளாச்சி வழக்கறிஞர் பஞ்சலிங்கம் சுல்தான்பேட்டை மணி மோகன் மதுக்கரை அருள் ராஜ் வெள்ளலூர் சக்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களிடத்தில் பி.ஜே.பி. அரசு செய்து வரும் அவதூறு பிரச்சாரத்தை முறிய டிக்கும் விதமாக திண்ணை பிரச்சாரம் செய்வது, தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை சிறப்பாக கொண்டாடுவது, நகர, ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகளை புதிதாக நியமனம் செய்வது குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டது.

தொகுதிக்கு இரண்டு பொறுப்பாளர்களை நியமனம் செய்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நல்வாழ்த்துகளுடன் - கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர்

# அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் புதல்வி மணவிழா!

## அமைச்சர்கள் – கழக முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, அக். 16-

கழகத் தலைவர் - முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடன் கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் - வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் - செந்தமிழ்ச் செல்வி ஆகியோரின் புதல்வி டாக்டர் எம்.ஆர்.கே.பி. கண்மணிக்கும்,

சென்னை - கீழ்ப்பாக்கம் லான்டன்ஸ் ரோடு ஆர்.கார்த்திக் - நீதியரசர் திலகவதி ஆகியோரின் புதல்வர் டாக்டர் கே. சித்தார்த்துக்கும் மணவிழா 25.10.2023 - புதன் கிழமை அன்று காலை 9 மணிக்கு, சென்னை திருவான்மியூர், ஸ்ரீராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெறுகின்றது.

முன்னதாக மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி 24.10.2023 செவ்வாய்க் கிழமை அன்று மாலை 6 மணிக்கு கலை இல மணி சென்னை வானொலி புகழ் அ.பார்த்திபனின் நாதஸ்வர இசை வாத்திய குழுவினரின் மங்கள இசை நிகழ்ச்சியுடன் நடைபெறு கின்றது.

இம்மணவிழா மற்றும் மணவிழா வரவேற்பில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், இந்நாள் ஒன்றிய, மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், தோழமைக் கட்சித் தலைவர்கள், கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மணவிழாவிற்கு வருகை தருவோரை கடலூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.கதிரவன் வரவேற்கிறார்.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் நன்றி கூறுகிறார்.

### மாவட்டச் செயலாளர் இல.பத்மநாதன் தலைமை!

# திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பங்கேற்பு!

திருப்பூர், அக்.16-

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நேர்காணல் இன்று(16.10.2023-திங்கட்கிழமை) காலை 10 மணியளவில் திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சிபாளையத்தில் அமைந்துள்ள திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் ஆகிய எனது தலைமையில், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முன்னிலையில் நடைபெற உள்ளது. அப்போது கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு நேர்காணலை துவக்கி வைக்க உள்ளார்.

எனவே திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு. கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி தோழர்கள் ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மட்டும் வெண் சீருடையுடன் தங்கள் வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கனவே பணியாற்றியிருந்தால் அது தொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களை கொண்டு வருமாறு கேட்டுக்கொள் கிறேன். மாவட்டச் செயலாளர் இல.பத்மநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.



சென்னை, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சரின் முகாம் அலுவலகத்தில், நேற்று முன்தினம் (14.10.2023) தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையால் IoT தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி “ஸ்மார்ட் மாவட்ட நிர்வாகம்” என்ற திட்டம் உருவாக்க தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், ஐக்கிய முடியரசின் இந்தோ பசிபிக், வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அமைச்சர் அனி மேரி டிரவேல்யன் ஆகியோர் முன்னிலையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை செயலாளர் தீரஜ் குமார், பிரிட்டிஷ் துணை உயர் ஆணையர் ஆலிவர் பால்ஹாட்செட் MBE, மின் ஆளுமை இயக்குநர்/ தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் தலைமை செயல் அலுவலர் பிரவீன் பி நாயர், தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மை தொழில்நுட்ப அலுவலர் ராபர்ட் ரவி, அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்ட மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் ஆலம்பூண்டிதனியார் பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் வேலைவாய்ப்புக்கான பணி ஆணையை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார். மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் காஞ்சனா, செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் ஆகியோர் உடன் உள்ளனர்.

### தந்தை பெரியாரின் கொள்கைகளை இளம் வயதிலேயே பெரிய எழுச்சியுடன் மேடைகளில் முழங்கி

# இயக்கத்தின் வளர்ச்சிக்குத் துணை நின்றவர் தளபதி அர்ச்சுனன் மன்றாடியார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் ஆற்றிய உரையில் புகழாரம்!

**சென்னை, அக்.16-**

**தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளை இளம் வயதிலேயே பெரிய எழுச்சியுடன் மேடைகளில் முழங்கி இயக்கத்தின் வளர்ச்சிக்கு துணை நின்றவர் இளைய பட்டக்கார் என்று சொல்லப்படும் தளபதி அர்ச்சுனன் என்று அவரது நூற்றாண்டையொட்டி காணொலி மூலம் ஆற்றிய உரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டினார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.10.2023) காணொலிக் காட்சி வாயிலாக திராவிடர் கழகத்தின் சார்பில் தளபதி அர்ச்சுனன் மன்றாடியார் அவர்களின் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு :-

பழையகோட்டை இளைய பட்டக்காரர் என்று சொல்லப்படும் மரியாதைக்குரிய அர்ச்சுனன் அவர்களின் நூற்றாண்டு விழாவுக்குத் தலைமை வகித்து அவரது படத்தை திறந்து வைத்துள்ள திராவிடர் கழகத் தலைவர் மானமிகு அய்யா ஆசிரியர் அவர்களே!

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விழாவில் பங்கெடுத்துக் கொண்டுள்ள திராவிட இயக்க ஆளுமைகளே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிறப்புமிகு நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ள இயலாத நிலையில் வேறு பணிகளில் நான் இருப்பதால் காணொளி மூலமாக எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1940ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் இந்த இயக்கத்தை வளர்ப்பது சிறு வயது இளைஞர்கள்தான் என்று குறிப்பிட்டார்கள்.

அத்தகைய இளைய தீரர்களில் ஒருவர் தான் பழையகோட்டை இளைய பட்டக்காரர் என்று சொல்லப்படும் மரியாதைக்குரிய அர்ச்சுனன் அவர்கள்.

இன்றைக்கு மிகப் பெரிய தலைவர்களாக போற்றப்படும் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் எனப் பலரும் மிக மிக இள வயதிலேயே மேடைகளில் முழங்க தொடங்கியவர்கள்.

**பகுத்தறிவு - சுயமரியாதை கருத்துகளை முழங்கியவர்!**

அதிலும் நம்முடைய அய்யா ஆசிரியர் அவர்கள் அந்தக் காலக்கட்டத்தில் பள்ளிச் சிறுவனாக இருந்து பத்து வயதில் மேடைகளில் முழங்கத் தொடங்கியவர் என்பதை அனைவரும் அறிவீர்கள்.

இப்படி ஏராளமான இளைஞர்கள் இளம் பெண்கள் சிறுவர்கள் இந்த இயக்கத்தை நோக்கி சிறுவயதிலேயே ஈர்க்கப்பட்டார்கள். பெரியாரின் கொள்கை மீதான ஈர்ப்பு மட்டுமே காரணமல்ல. பெரியார் என்ற தலைவர் மீதான பாசமும், அன்பும் இன்னொரு முக்கியமான காரணம். அப்படி தந்தை பெரியாரால் ஈர்க்கப்பட்டவர்களுள் முக்கியமானவர் அர்ச்சுனன் அவர்கள்.

இளம் வயதிலேயே பெரும் எழுச்சியுடன் தந்தை பெரியாரின் கொள்கைகளை மேடைகளில் முழங்கி, இயக்கத்தின் வளர்ச்சிக்குத் துணை நின்றவர் பழையகோட்டை இளைய பட்டக்காரர் ந.அர்ச்சுனன் அவர்கள். தமிழ்நாட்டின் மேற்கு மண்டலத்தில் பழையகோட்டை குடும்பத்தார் என்றால் அறியாதவர்கள் கிடையாது. மிகப் பெரிய செல்வந்தர்கள்.

ஏராளமான நிலபுலன்களைக் கொண்டவர்கள். காங்கேயம் மாடுகள் என இன்று புகழ் பெற்றிருக்கும் மாடுகளை வளர்த்தெடுத்ததில் இந்தக் குடும்பத்தினருக்குத் தனிப் பெருமை உண்டு. அத்தகைய செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்களின் இளைய மகனாக, நல்லசேதுபதி சர்க்கரை மன்றாடியாரின் இளவலாகப் பிறந்த இளைய பட்டக்காரர்தான் அர்ச்சுனன் அவர்கள்.

தந்தை பெரியாரின் கொள்கைகளால் இருபது வயதிலேயே ஈர்க்கப்பட்டு, அவரது தளபதியாகத் திகழ்ந்தவர் அவர். தமிழ்நாடெங்கும் பயணித்து பெரியாரின் பகுத்தறிவுசுயமரியாதை கருத்துகளை முழங்கியவர். பொதுக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் அர்ச்சுனன் முன்வைத்த கருத்துகள், சிந்தனையைத் தூண்டி, செயலாற்றலுக்குத் துணை நின்றன.

நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் இணைக்கப்பட்டு 1944ஆம் ஆண்டு சேலம் மாநாட்டில், திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. பெரியாரின் தலைமையிலான இயக்கத்திற்குப் பெயர் மாற்றம் செய்யும் தீர்மானத்தின் பெயர், அண்ணாதுரை தீர்மானம். பேரறிஞர் அண்ணாவின் பெயரால் அமைந்த தீர்மானம். அவரே முன்மொழிந்த தீர்மானம் அது. அதன்பிறகு, திராவிடர் கழகத்திற்கு ஒரு கொடி வேண்டும் எனப் பெரியார் திட்டமிட்டார். அதற்கான வடிவமைப்பின்போதுதான், கருப்பு நிறத்திற்கு நடுவே சிவப்பு வட்டம் வரைவதற்கு மை தேவைப்பட்டபோது, சிவப்பு மை இல்லாததால், தலைவர் கலைஞர் அவர்கள் தன் விரலில் குண்டூசி யால் குத்தி, பொங்கி வந்த ரத்தத்தைக் கொண்டு சிவப்பு வட்டத்தை வரைந்தார்.

கொள்கையாளரின் குருதியில் வடிவமைக்கப்பட்டது திராவிடர் கழகக் கொடி. சமுதாய இருளை அகற்றி, புரட்சி வெளிச்சம் பரவ வேண்டும் என்ற அடையாளமான அந்தக் கொடியை பல ஊர்களிலும் ஏற்றியவர் பழையகோட்டை இளைய பட்டக்காரர் அர்ச்சுனன்.

**சமுதாய சீர்திருத்தப் பாதையில் பயணித்தவர்!**

கொடியேற்றி வைத்து அவர் ஆற்றிய வீர உரைகள், அன்றைய இளைஞர்களின் நெஞ்சில் அறிவுச் சுடராக ஒளிர்ந்தது.

ஜமீன் குடும்பத்துப் பையனான அர்ச்சுனன் தன் சொத்து, சுகம், செல்வச் செழிப்பு பற்றிக் கவலைப்படாமல், கரடுமுரடான சமுதாய சீர்திருத்தப் பாதையில் பயணித்தார். தந்தை பெரியாருக்குத் தளபதியாகச் செயல்பட்டார். அவர் கொள்கைகளைக் கொட்டி முழக்கி, பாட்டாளிகளின் தோழனாகத் திகழ்ந்தார்.

கோவையில் நடந்த திராவிடர் இளைஞர் முதலாவது மாநாட்டுக்கு வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தவர் அர்ச்சுனன். அந்த மாநாட்டில் தலைமையுரை ஆற்றியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். "ஓர் அரியதீரமுள்ள முன்னணிப் படை இன்று தயாராகி விட்டது. கஷ்ட நஷ்டங்களைக் கவனியாமல், எதிர்ப்புக்கு அஞ்சாமல், சூது சூழ்ச்சிகள் கண்டு சோர்வடையாமல், சளைக்காமல் உழைக்க இளைஞர்கள் முன்வந்துள்ளனர். இது கண்டு எதிரிகள், எப்படி புறப்பட்டது இந்தப் படை, எப்படி அமைந்தது இத்தகைய முன்னணி என்று எண்ணி ஏங்குகின்றனர்" இப்படி உணர்ச்சியும் எழுச்சியும் மிக்க அழகு தமிழில் பேசியவர் அண்ணா அல்ல, அர்ச்சுனன்தான் இப்படிப் பேசினார்.

அவருடைய சொற்பொழிவுகளின் பதிவுகளைப் படிக்கும்போது, பேரறிஞர் அண்ணாவின் பேச்சைக் கேட்பது போலவே இருக்கிறது. தந்தை பெரியாரின் தளபதிகளான பட்டுக்கோட்டை அழகிரி, பேரறிஞர் அண்ணா, பழையகோட்டை அர்ச்சுனன் எனப் பலரும் கொள்கை முழக்கத்தால் எளியவர்களையும் ஈர்க்கக்கூடிய ஆற்றல் பெற்றவர்களாக தொடக்க காலத்தில் இருந்திருக்கிறார்கள். நம்பிக்கைக்குரிய இளைஞராகத் திகழ்ந்த அர்ச்சுனன் அவர்களைத் திராவிடர் கழகத்தின் முதல் பொருளாளராக நியமித்தார் பெரியார் அவர்கள்.

தந்தை பெரியாரின் நம்பிக்கையை ஒருவர் பெறுவது என்பது எவ்வளவு சிரமமானது என்பதை அனைவரும் அறிவோம். அத்தகைய பெரியார் அவர்களையே இளைஞராக இருக்கும்போது ஈர்த்து நம்பிக்கையைப் பெற்றவர் அர்ச்சுனன் அவர்கள் என்பதே அவரது பெருமையைச் சொல்வதற்கு போதுமான எடுத்துக்காட்டு.

> **தந்தை பெரியாரின் கொள்கைகளால் இருபது வயதிலேயே ஈர்க்கப்பட்டு, அவரது தளபதியாகத் திகழ்ந்தவர் அவர். தமிழ்நாடெங்கும் பயணித்து பெரியாரின் பகுத்தறிவு சுயமரியாதை கருத்துகளை முழங்கியவர். பொதுக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் அர்ச்சுனன் முன்வைத்த கருத்துகள், சிந்தனையைத் தூண்டி, செயலாற்றலுக்குத் துணை நின்றன.**

**தாய்க் கழகத்தின் கொள்கை மறவர் அர்ச்சுனன்!**

திராவிடர் கழகம் உருவான சில ஆண்டுகளில், தந்தை பெரியாரை கோவை மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் அழைத்துச் செல்வதற்காக, அன்றைய நாளில் 16 ஆயிரம் ரூபாய்க்கு புது கார் ஒன்றை வாங்கியவர் அர்ச்சுனன். பத்து கிராம் தங்கம் 99 ரூபாய்க்கு விற்ற காலம் அது. அந்தக் காலத்தில் 16 ஆயிரம் ரூபாய்க்கு புது கார் வாங்கிக் கொடுத்தவர். இப்படி தனது உழைப்பை மொத்தமாக பெரியார் கொள்கைக்கு வழங்கியவர் அர்ச்சுனன் அவர்கள்.

"திராவிடர்களாகிய நாம் சுதந்திரத்துடன் வாழ வேண்டும்! இல்லாவிட்டால் மாள வேண்டும்" என்று ஊர் ஊராகப் போய் எழுச்சி ஏற்படுத்தினார். மேற்கு மண்டலத்தில் கருஞ்சட்டைப் படையை பலப்படுத்தியது அவரது கர்ஜனைதான். அத்தகைய கொள்கை வீரர். பேச்சாலும் செயலாலும் திராவிட இயக்கத்தின் பக்கம் பலரையும் ஈர்த்த தீரர், உடல்நலன் பாதிக்கப்பட்டு தன் 23 வயதிலேயே உயிர் நீத்தார் என்பது மிகமிக வருத்தம் தரும் செய்தி.

அர்ச்சுனன் அவர்களுடைய மறைவு கேட்டு அதிர்ச்சியடைந்த பெரியார், கண்ணீருடன் தன் கைப்பட குடிஅரசு பத்திரிகையில் இரங்கல் தலையங்கம் எழுதினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள், 'திராவிட நாடு' இதழில் தலையங்கம் தீட்டினார். தமிழ்நாடெங்கும் திராவிடர் கழகத்தினர் சோகத்தில் மூழ்கினர். இழப்புகளையும் வலிகளையும் எதிர்கொண்டே திராவிட இயக்கம் வளர்ந்தது. அர்ச்சுனன் அவர்களின் மறைவின் துயரையும் தாங்கிக்கொண்டு, அவரது புகழ் போற்றும் நிகழ்வுகளை அன்றைக்கும் திராவிடர் கழகம் நடத்தியது. இன்றைக்கும் அவர் நூற்றாண்டு நிறைவு விழாவை நடத்துகிறது.

இலட்சியவாதிகள் இறக்கலாம். இலட்சியங்கள் ஒரு போதும் இறப்பதில்லை என்று எழுதியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

இலட்சியங்களை உயர்த்திப் பிடித்த இலட்சியவாதியாம் அர்ச்சுனனை மறக்காமல், அவரது புகழினைப் போற்றும் அய்யா ஆசிரியர் அவர்களுக்கும் திராவிடர் கழகத்தினருக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டை குழல் துப்பாக்கி என்றார் பேரறிஞர் அண்ணா. தாய்க் கழகத்தின் கொள்கை மறவர் அர்ச்சுனனை தி.மு.கழகம் நினைவிலேந்திப் போற்றுகிறது. பழையகோட்டை பட்டக்காரர் குடும்பத்தினர் பலர் இன்றளவும் தி.மு.கழகத்தின் கொள்கை முரசங்களாகத் திகழ்ந்து வருகிறார்கள்.

அர்ச்சுனன் போன்ற தீரர்கள் சுயமரியாதை பகுத்தறிவு இயக்கத்துக்கு இன்னும் தேவைப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் திராவிட இயல் கோட்பாடு ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது. "எங்களுக்கு ஒரு பெரியார் இல்லையே! எங்கள் மாநிலத்தில் திராவிட இயக்கம் இல்லையே" என்ற ஏக்கம் மற்ற மாநிலங்களில் கேட்கத் தொடங்கி இருக்கிறது.

பழையகோட்டை இளைய பட்டக்காரர் அர்ச்சுனன் அவர்கள் வழியில், இலட்சிய முழக்கத்தை தொடர்ந்து எழுப்புவோம். சமூகநீதியையும் சுயமரியாதையையும் இந்தியா முழுமைக்கும் பரவிடச் செய்வோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## பெரம்பலூர் மாவட்ட மருத்துவ அணி சார்பில் மாபெரும் ரத்ததான முகாம்!

### ஆ.இராசா எம்.பி.துவக்கி வைக்கிறார்! குன்னம் சி.இராஜேந்திரன் பங்கேற்பு

*பெரம்பலூர், அக்.16 -*

*முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட மருத்துவ அணி சார்பில், ரத்ததான முகாம் நடத்தி அதன் மூலம் பெறப்படும் 100 யூனிட் ரத்தம் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்த ரத்ததான முகாமை கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., துவக்கி வைக்கிறார்.*

*இது குறித்து மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 100 யூனிட் ரத்தம் பெற்று பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு வழங்கப்படுகிறது. 18.10.2023, (புதன்கிழமை ) அன்று காலை 9.00 மணியளவில், பெரம்பலூர் மாவட்ட மருத்துவ அணி சார்பில் 100 யூனிட் ரத்தம் பெறும் ரத்ததான முகாம், பெரம்பலூர் பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது. இந்த ரத்ததான முகாமை கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ. இராசா.எம்.பி., துவக்கி வைக்கிறார். இந்த ரத்த தான முகாமில் பெறப்படும் 100 யூனிட் ரத்தம் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு வழங்கப்படுகிறது.*

*இதில் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பா ளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



மதுரை வடக்கு மாவட்டம் சோழவந்தான் தொகுதியில் சேலம் இளைஞர் அணி மாநாடு, கழக இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் குறித்த சோழவந்தான் பேரூர் செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். போது எடுத்த படம். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் சுபத.சம்பத், கழக நிர்வாகிகள் சோமசுந்தர பாண்டியன், சி.புதூர் சேகர், நேரு பாண்டியன், சிறைச்செல்வன், சத்திய பிரகாஷ், ஜெயராமன், கண்ணன், மருது பாண்டியன், இளைஞரணி நிர்வாகிகள் வெற்றி செல்வம், மருதுராஜா, இளங்கோவன், குமரேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கழகத்தினர் உள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நாச்சியார்கோவில் ஆர்.பாண்டுரெங்கன்**
**அக்டோபர் 16 (2011)**



**தஞ்சை மாவட்டத்தில் கழகம் துவங்கியபோது கும்பகோணம் பகுதியில் நூற்றுக்கணக்கான இளைஞர்களை இயக்கத்தில் சேர்த்த பெருமைக்குரியவர்.**

**கே.கே.நீலமேகம், மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி, குடந்தை பத்மநாபன் ஆகியோருடன் இணைந்து கழகப் பணியாற்றியவர்.**

**குடந்தை, நாச்சியார்கோவில் பகுதிகளில் பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரை அழைத்து பல பொதுக்கூட்டங்களை நடத்தியவர்.**

**கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



நாடாளுமன்ற தகவல் தொழில்நுட்ப நிலைக்குழு ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் உள்ள ஜார்க்கண்ட் மாநில சட்டசபையில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்ப மேலாண்மை செயல்படுவது மற்றும் அரசு துறைகள், வங்கிகளில் செயல்படும் விதம் குறித்து ஆய்வை நிலைக்குழு தலைவரும் ஆம் ஆத்மி கட்சியின் முன்னணி தலைவருமான நாராயண தாஸ் குப்தா தலைமையில், கழக மாநிலங்களவை உறுப்பினர் இரா.கிரிராஜன் உள்ளிட்ட பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் ஜார்க்கண்ட் மாநில சட்டமன்ற செயலாளர், மாநில தகவல் தொழில்நுட்ப துறை அதிகாரிகள் மற்றும் பல்வேறு வங்கிகளின் உயர் அதிகாரிகளுடனான கலந்தாய்வு செய்து, ஜார்க்கண்ட் மாநில சட்ட சபையை பார்வையிட்டு சபாநாயகர் ரபீந்திரநாத் மகாதூ அவர்களை நேரில் சந்தித்தும் கலந்துரையாடினர்.

சென்னை – புறநகர்ப் பகுதிகளில்

# சாலைகள் சீரமைப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது!

சென்னை, அக். 16-

அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகளின் நிலை குறித்தும், சாலை வெட்டுக்களை சீரமைக்கும் பணிகள் குறித்தும், மழைநீர் வடிகால் பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், உறுப்பினர் செயலாளர், பெருநகர வளர்ச்சிக் குழுமம், நிர்வாக இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், இயக்குநர், பேரிடர் மேலாண்மை, செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, இணை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், பெருநகர சென்னை மாநகராட்சியின் இணை ஆணையர் (பணிகள்), கூடுதல் மாநகர காவல் ஆணையர் (போக்குவரத்து) மற்றும் வட்டார துணை ஆணையர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பல்வேறு துறைகளின் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலாளர் அவர்கள் மண்டலம் வாரியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நான்காவது ஆய்வுக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் சாலைப்பணிகள் குறித்தும் ஆய்வு செய்தார்கள்.

இக்கூட்டத்தில், போக்குவரத்து காவல்துறையிடம் மேடவாக்கம் சோழிங்கநல்லூர், மணப்பாக்கம் கொளப்பாக்கம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளுக்கு உடனடியாக அனுமதி அளிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் இதுவரை 96 சதவிகித மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதென்றும் மீதமுள்ள பணிகள் 20.10.2023க்குள் முடிக்கப்படும் என தெரிவித்தார்கள்.

தலைமைச் செயலாளர் அவர்கள் மண்டலம்4 முதல் மண்டலம்13 வரை உள்ள 25 தெருக்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை 20.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். கொசஸ்தலையாறு வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளில் 8 இடங்களில் இணைப்பு செய்ய வேண்டிய மழைநீர் வடிகால் பணிகளை 20.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். இணை ஆணையர் (பணிகள்), பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் கோவலம் வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளில் 20 இடங்களில் இணைப்பு செய்ய வேண்டிய மழைநீர் வடிகால் பணிகளில்

17 இடங்களில் மின் கம்பங்கள் அகற்றி பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்தார்கள். தலைமைச் செயலாளர் அவர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடம் இந்த 17 இடங்களை கள ஆய்வு செய்து இரண்டு நாட்களுக்குள் மின் கம்பங்களை அகற்றித்தருமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி இந்த 17 இடங்களிலும் மழைநீர் வடிகால் பணிகளை 20.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். மேலும், மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்ட இடங்களில் Silt Catch Pit அமைக்கும் பணி, construction debri அகற்றும் பணி, சாலை வெட்டு சீரமைக்கும் பணிகளை 20.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

நீர்வள ஆதார துறை, அனை ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிக்காக நிலம் கையகப்படுத்தும் பணியினை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். மேடவாக்கம் பிரதான சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியில் அதிக திறன் கொண்ட மோட்டார் பம்புகள் நான்கு இடங்களில் மழைநீர் அகற்ற தயார் நிலையில் வைக்குமாறு அறிவுறுத்தினார்கள். கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வள துறை அவர்கள் 9 இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் shutter அமைக்கும் பணிகளில் 4 இடங்களில் பணி முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்கள். தலைமைச் செயலாளர் அவர்கள் மீதமுள்ள 5 இடங்களில் shutter அமைக்கும் பணிகளை விரைவில் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

நெடுஞ்சாலைகள் துறை, ஈ.வெ.ரா பெரியார் சாலை, அண்ணா சாலை. டைடல் பார்க் அருகில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் விபத்து ஏற்படாத வண்ணம் இருக்க சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் அமைத்துள்ள தடுப்பரன் (barricading) போன்று அமைக்குமாறு அறிவுறுத்தினார்கள். மழைநீர் வடிகால்களில் மழைநீர் செல்ல போதிய inlet அமைக்குமாறு அறிவுறுத்தினார்கள். நடைபாதைகளில் kerbனை இடைவெளி இல்லாமல் சீராக அமைக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

இணை ஆணையர் (பணிகள்), பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் 07.10.2023 அன்று நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப சாலைவெட்டு சீரமைக்கும் பணிகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தலைமைச் செயலாளர் அவர்களுக்கு விவரித்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கே.கே. நகர் அண்ணா பிரதான சாலை, நெடுஞ்செழியன் சாலை, பாடசாலை, மணலி சின்னசேக்காடு, மாதவரம், முகலிவாக்கம், வளசரவாக்கம், இராமாபுரம், மணப்பாக்கம் மற்றும் மடிப்பாக்கம் பகுதிகளில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் பணிகள் முடிக்கப்பட்ட சாலைகளில் நிரந்தர சாலை வெட்டு சீரமைப்பு பணிகள், தற்காலிக சாலை வெட்டு சீரமைப்புப்பணிகளையும் அனைத்தும் 20.10.2023க்குள் முடிக்க தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

நெடுஞ்சாலைத்துறை, அண்ணா சாலை, ஜி.எஸ்.டி சாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை, 100 அடி சாலை, மேடவாக்கம் பிரதான சாலை, வேளச்சேரிதாம்பரம் சாலை, மர்மலாங் பாலம் இரும்புலியர் சாலை, வளசரவாக்கம் வள்ளுவர் நகர் சாலை, எருக்கஞ்சேரி சாலை, மேடவாக்கம் மாம்பாக்கம் சாலை, வானகரம் அம்பத்தூர் புழல் சாலை ஆகிய சாலைகளில் மேற்கொண்டு வரும் சாலை வெட்டு மற்றும் சீரமைப்புப்பணிகளை 20.10.2023க்குள் விரைந்து முடிக்கு மாறு அறிவுறுத்தினார்கள்.

தாம்பரம் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் ராதா நகர் சுரங்க பாதை மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும் 20.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

ஆவடி மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து மழைநீர் வடிகால் பணிகளையும் 20.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் அருகில் ஜி.எஸ்.டி சாலை மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி 50 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

இறுதியாக வடகிழக்கு பருவமழை 23.10.2023 25.10.2023ல் துவங்குவதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளதாகவும், அதன் பொருட்டு நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் தற்காலிகமாக முடித்துக் கொள்ள வேண்டும். புதிய சாலை வெட்டுப் பணிகள் மேற்கொள்ளக்கூடாது என்று அறிவுறுத்தினார்கள். மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகளையும் முழுமையாக முடிக்க வேண்டும். Silt catch pitகளில் மண், கான்கிரீட் கலவைகள் மற்றும் தார் கலவைகள் ஏதேனும் இருப்பின் உடனடியாக அகற்றப்பட வேண்டும். சுரங்கப்பாதை களில் மோட்டார் பம்புகள் அனைத்தும் சரியாக இயங்குவதை உறுதிபடுத்த வேண்டும். மேலும், தண்ணீர் தேங்கியுள்ள அளவுகோல் நுழைவுகளிலேயே பொறுத்தப்பட வேண்டும். மரக்கிளைகள் கழிக்கப்பட வேண்டும். அனைத்து துறைகளின் சாலை வெட்டுக்கள் உடனடியாக சீர் செய்யப்பட்டு வாகனங்கள் சிரமமின்றி விபத்தில்லாமல் பயணிக்க உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

நெல்லை பாளையங்கோட்டை - மனகாவலம்பிள்ளை நகரில்

# தூய்மைப் பணியாளர்களுக்கு 408 வீடுகள் கட்டும் பணி!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை.அக்.16

நெல்லை பாளையங்கோட்டை மனகாவலம் பிள்ளை நகரில் தூய்மை பணியாளர்களுக்கு ரூபாய் 53.19 கோடி மதிப்பீட்டில் 408 வீடுகள் கட்டும் பணியை சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு அடிக்கல் நாட்டில் துவக்கி வைத்து ஒவ்வொரு வீட்டிற்கும் தேவையான ரூபாய் 11 லட்சத்து 54 ஆயிரத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசு சார்பாக வழங்கி உள்ளார் என தெரிவித்தார்.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை தொகுதிக்கு உட்பட்ட மனகாவலம்பிள்ளை நகர் அம்பேத்கார் காலனி பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் தூய்மை பணியாளர்களுக்கு கடந்த 1996 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 366 அடுக்குமாடி குடியிருப்புகள் பழுதடைந்து மக்கள் வசிக்க இயலாத நிலையில் இருந்தது.

மேலும் இந்த கட்டிடம் எப்போது வேண்டுமானாலும் இடிந்து விழுந்து நிலையில் இருந்தது. அங்கு வசித்த பொதுமக்கள் கோரிக்கையின் அடிப்படையில் புதிய கட்டிடம் கட்டப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள்.

அதன்படி அந்த இடத்தில் புதிதாக 408 வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு பங்கேற்று புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வு நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப், மாவட்ட ஆட்சியர் மரு. கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் பி.எம். சரவணன், துணை மேயர் கே.ஆர். ராஜு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த குடியிருப்புக்கு ரூபாய் 53.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமான பணிகள் விரைவில் தொடங்க உள்ளது. ஒரு குடியிருப்புக்கு மொத்தம் மதிப்பு தொகை ரூபாய் 13.04 லட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒன்றிய அரசு மானியமாக ரூபாய் 1.50 இலட்சமும், மாநில அரசின் மானியமாக ரூபாய் 11,54,000,ம் வழங்கப்படுகிறது.ஏற்கனவே வசித்த 366 பயனாளிகளுக்கும் தலா ரூபாய் 1லட்சம் பயனாளி பங்களிப்பு தொகையாக செலுத்தப்படுகிறது. இன்று திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடியிருப்பும் 400 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட உள்ளது. இதில் கழிவறை, படுக்கையறை,சமையலறை வசதியுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பாக கட்டப்படுகிறது. லிப்ட் மற்றும் கார் பார்க்கிங் வசதியும் அமைய உள்ளது. மேலும் தார் சாலை, குடிநீர், மழைநீர் வடிகால், மழைநீர் சேகரிப்பு மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகளும் அமையப்பட உள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் மாநகராட்சி மூலம் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடையுடன் இணைக்கப்பட உள்ளது.

இந்தப் பணிகளை 18 மாதங்களுக்குள் முடிக்கும் வகையில் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படுகிறது.

பின்னர் சட்டபேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் மூலம் பாளையங் கோட்டை அம்பேத்கர் நகரில் பழுதடைந்த 408 வீடுகளுக்கு பதிலாக புதிய வீடுகள் கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது.அதற்காக ரூபாய் 53.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான கட்டுமான பணிகளை தற்போது துவங்கி உள்ளது. 18 மாதங்களில் இந்த பணிகள் நிறைவடைந்து 408 பயனாளிகள் புதிய வீடுகளில் குடியேறுவர் .

முதலமைச்சர் அவர்கள் வீடு இல்லாதவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வியல் மேம்பாட்டு வாரியம் சார்பில் அனைவருக்கும் வீடு வசதி திட்டத்தின் கீழ் வீடுகளை கட்டி கொடுத்து தமிழ்நாட்டில் எல்லோரும் சொந்த வீடுகளில் வசிக்க வேண்டும் என்கிற நிலையை உருவாக்கி வருகிறார்கள்.நகர்ப்புற பேருந்துகளில் மகளிர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திடம் தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.ஏழை, எளியோர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்காக இண்ணுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 மணி நேரம் திட்டம் கொண்டுவரப்பட்டு இத்திட்டத்தின் மூலம் ஏழை,எளியவர்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு பயன் பெற்று வருகின்றனர்.

இதற்கான நிதி ஆதாரம் பயனாளிகள் 1 லட்சம்,ஒன்றிய அரசு ரூபாய் 1.50 லட்சம்,மீதி ஒவ்வொரு வீட்டிற்கும் தேவையான ரூபாய் 11 லட்சத்து 54 ஆயிரத்தை முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசு சார்பாக வழங்கி உள்ளார்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், ஒன்றியச் செயலாளர் பி.சி.ராஜன், ஜோசப் பெல்சி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ்,

மாமன்ற உறுப்பினர் பவுன்ராஜ், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வியல் மேம்பாட்டு வாரிய நிர்வாகம் பொறியாளர் சாந்தி, உதவி நிர்வாக பொறியாளர்கள் மாடசாமி, ராஜகோபால் ஜானி உள்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் ஒன்றிய, நகரம், பேரூர், ஊராட்சி கழக புதிய மாணவர் அணி சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார். உடன் நெய்வேலி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் சபா இராசேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் நெய்வேலி க.தண்டபாணி உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் நா. குப்புசாமி

### அக்டோபர் 16 (1994)



இளமைக்காலம் முதல் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்டப் பொறுப்பாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1974ல் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் தஞ்சையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் முன்னிலை வகித்தார். அதோடு தனது பகுதியில் தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரத்தை செய்தவர்.

தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த இவர் சிறந்த வழக்கறிஞராகவும் பணியாற்றியவர்.

கழகத் தோழர்களின்மீது தொடுக்கப்பட்ட பல வழக்குகளில் ஆஜராகி அவர்களுக்காக வாதாடியவர்.

கழகம் அறிவித்த விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பரங்கிமலை எஸ். வேணுகோபால்

### அக்டோபர் 16 (1994)



இளமைக் காலத்திலேயே தந்தை பெரியாரின் கொள்கைகளிலே நாட்டம் கொண்டு, பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோர் தலைமையில், தொடர்ந்து கழகப் பணியாற்றி வந்தவர் இவர். 25 ஆண்டுகளுக்கும் மேலாக பரங்கிமலை கிளைக் கழகச் செயலாளராகவும் – பரங்கிமலை நகரியக் கழகத்தின் முதல் செயலாளராகவும் பணியாற்றியவர்.

தொடர்ந்து முப்பதாண்டு காலம் பரங்கிமலை கண்டோண்மென்ட் உறுப்பினராகவும் – இருமுறை கண்டோண்மென்ட் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

“பரங்கிமலைப் பகுதியிலே கழகத்தை வளர்த்த தொண்டர்களில் மறைந்த வேணுகோபால் அவர்களும் ஒருவர். கட்சியிலே உள்ள தனிப்பட்டவர்களைவிட – கழகத்தின் ஒட்டுமொத்த நலன்தான் முக்கியம் எனக் கருதி, கழகத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். எனது அன்பைப் பெற்றவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

## அனைத்துத் துறைகளிலும் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற

# இளம் தலைமுறைக்காகக் கொண்டுவரப்பட்ட ‘நான் முதல்வன்’ திட்டம்!

### மாணவர்களுக்கு மாதம் ரூ.7,500 ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, அக்.16-**

**‘நான் முதல்வன் போட்டித் தேர்வு பிரிவு’ன் மூலம் குடிமைப் பணி தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ. 7,500 ஊக்கத் தொகையாக வழங்கும் அரசின் முற்போக்குத் திட்டத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்து உரையாற்றினார்.**

அப்போது அவர் பேசியதாவது:

“ஒன்றிய அரசின் தேர்வுகளுக்குத் தயாராகி வரும் உங்களை ஊக்கப்படுத்துவதற்கான தமிழ்நாடு அரசின் சார்பாக மாதம் 7,500 ரூபாய் வழங்குகின்ற இந்தச் சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (யு.பி.எஸ்.சி ), ஸ்டாப் செலக்சன் கமிஷன், ரெயில்வே ரெக்ரூட்மெண்ட் போர்டு, இந்தியன் பேங்கிங் பர்சனல் செலக்சன் ஆகிய தேர்வுகளில் நம்முடைய தமிழ்நாட்டு இளைஞர்கள், இளம்பெண்கள் அதிக அளவில் வெற்றி பெற வேண்டும் என்பதுதான் நம்முடைய திராவிட மாடல் அரசின் எண்ணம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல குடும்பங்களில் முதல் தலைமுறை பட்டதாரிகளை உருவாக்கினார்கள். அதோடு அவர் நிற்கவில்லை. அந்தப் பட்டதாரிகளுக்கு அரசுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ வேலைவாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

**திராவிட இயக்க அரசின் இலட்சியம்!**

கல்வியாக இருந்தாலும், வேலையாக இருந்தாலும் எல்லோருக்கும் சென்றடைய வேண்டும் என்பதுதான் நம்முடைய திராவிட இயக்க அரசினுடைய இலட்சியம்.

அதற்காகத்தான் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறி ஞர் டாக்டர் கலைஞர் அவர்களும் பாடுபட்டார்கள், உழைத்தார்கள். அவர்களுடைய பாதையில்தான் இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களும் செயல்பட்டு வருகின்றார்கள்.

இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்கான திறனை வளர்க்கவும் அதன் மூலம் அவர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் வழிகாட்டுதல் வழங்குவதற்கும் தொடங்கப்பட்ட மிக முக்கியமான திட்டம்தான் இந்த நான் முதல்வன் திட்டம்.



நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்களும், இளம்பெண்களும் அவர் அவருக்குப் பிடித்த துறையில் முதலிடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டிருப்பதுதான் இந்த நான் முதல்வன் திட்டம்.

**13 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்**

இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத இந்தத் திட்டம் இளைஞர்கள் இளம் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றி வைக்கின்ற ஒரு மகத்தான திட்டமாகத் திகழ்கின்றது. இந்தத் திட்டம் தொடங்கி, ஒரே ஆண்டில் 13 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்று இருக்கிறார்கள்.

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கின்றது. ‘நான் முதல்வன் திட்டம்’ தனியார் துறை வேலைவாய்ப்புகளுக்கு மட்டும் உருவாக்கப்பட்ட திட்டமல்ல. அரசுத் துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் நமது இளம் தலைமுறையினர் வேலைவாய்ப்பு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கொண்டுவரப்பட்ட திட்டம் இந்த நான் முதல்வன் திட்டம்.

அதிலும், குறிப்பாக ஒன்றிய அரசுப் பணிகளில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அதிக அளவில் வரவேண்டும் என்பதற்காக நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகளை நம்முடைய திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வருகின்றது.

ஒன்றிய அரசு நடத்துகின்ற யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன், ஸ்டாப் செலக்சன் கமிஷன், ரயில்வே ரெக்ரூட்மென்ட் போர்டு, இந்தியன் பேங்கிங் பர்சனல் செலெக்ஷன் போன்ற அரசுப் பணிக்கான போட்டித் தேர்வுகளுக்குச் சிறப்பான பயிற்சி அளிக்க `நான் முதல்வன் திட்டம்’ சார்பில் போட்டித் தேர்வுகள் எனும் தனிப்பிரிவு ஒன்றை இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் நாம் தொடங்கினோம்.

அரசுப் பணிகளுக்குச் செல்ல வேண்டும் என்ற கனவில் இருக்கும் இலட்சக்கணக்கான இளைஞர்களுடைய கனவை நிஜமாக்குவதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம்.

**தமிழ்நாட்டில் மிகச்சிறந்த ஆசிரியர்கள்**

தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வியாக இருந்தாலும் சரி, உயர் கல்வியாக இருந்தாலும் சரி, மிகச்சிறந்த ஆசிரியர்கள் இருக்கிறார்கள். சிறந்த பாடத்திட்டமும் இருக்கின்றது. மிகச்சிறந்த உட்கட்ட அமைப்பும் வசதிகளும் இருக்கின்றன.

தேசியக் கல்வி நிறுவனத்தின் தரநிர்ணயப் பட்டியலில் முதலில் உள்ள 100 கல்வி நிறுவனங்களில் 18 நிறுவனங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. ஆனால், இத்தனை வசதிகள் இருந்தும் கடந்த சில ஆண்டு களாக யு.பி. எஸ்.சி போன்ற ஒன்றிய அரசு நடத்தும் தேர்வுகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் தேர்ச்சி பெற்று செல்வது மிகவும் குறைவாக இருக்கின்றது. இது நமக்கு மிகுந்த வருத்தத்தையும் அளிக்கின்றது.

இதற்கு முன்பெல்லாம் ஒன்றிய அரசினுடைய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்று யு.பி.எஸ்.சி காலி பணியிடங்களில் சேர்ந்தவர்களில் பத்து சதவிகிதத்திற்கும் மேல் தமிழ்நாட்டு இளைஞர்கள் இருந்தார்கள்.

ஆனால், 2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு அது குறைய ஆரம்பித்து விட்டது. 10 சதவிகிதம் இருந்தது, இப்பொழுது 5 சதவிகிதத்திற்கும் கீழே அதாவது பாதியாகக் குறைந்து இருக்கின்றது. இந்த நிலை தொடர்ந்தால், இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு ஒன்றியத்திலும் மாநிலத்திலும் அரசு உயர் பதவியில் தமிழர்களே இல்லாத நிலை ஏற்பட்டு விடும்.

அப்படி ஒரு நிலை வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் நான் முதல் திட்டத்தில் போட்டித் தேர்வுகளுக்கென ஒரு பிரிவு உருவாக்கப்பட்டது.

அப்படி ஒரு பிரிவைத் தொடங்கினால் மட்டும் போதாது. அதைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் கடந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு கோடி ரூபாய் நிதியும் நம்முடைய முதலமைச்சர் ஒதுக்கித் தந்தார்கள்.

**மாணவர்களுக்கு ரூ.25 ஆயிரம் ஊக்கத்தொகை**

தமிழ்நாட்டைச் சேர்ந்த யு.பி. எஸ்.சி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று, யு.பி.எஸ்.சி முதன்மைத் தேர்வுக்கும் தயாராகும் மாணவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்க, ‘நான் முதல்வன் போட்டித் தேர்வின் பிரிவு’ மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன் மூலம் இந்த ஆண்டு 435 மாணவர்கள் பயனடைந்திருக்கிறார்கள். அதுமட்டுமில்லாமல் இத்திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த ஆயிரம் மாணவர்கள் மதிப்பீட்டு தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் யு.பி.எஸ்.சி முதல்நிலை தேர்வுக்குத் தயாராகுவதற்காக மாதம், மாதம் ரூ.7,500 உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த உதவித் தொகை 10 மாதங்களுக்கு வழங்கப்படும். இந்தத் தேர்வில் ஐம்பதாயிரம் மாணவர்கள் பங்கேற்றனர். அதில் சிறந்த முறையில் தேர்வு எழுதி வெற்றி பெற்றவருடைய வரிசையில் முதல் ஆயிரம் நபர்களுக்கு இடம்பெற்ற உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக் களையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த ஊக்கத்தொகையானது குடிமைப்பணித் தேர்வுக்குத் தயாராகி வரும் மாணவர்கள் உங்களுடைய பொருளாதாரச் சுமையை நீக்கும். உங்களுடைய வேறு எந்தக் கவலையும் இல்லாமல் படிப்பில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும் என்ற சிந்தனையோடு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

நீங்கள் ஒவ்வொருவரும் தேர்வில் வெற்றிபெற வேண்டும். இந்தியாவின் வளர்ச்சி என்பது மாநிலங்களுடைய வளர்ச்சியில்தான் இருக்கின்றது. அப்படி மாநிலங்கள் வளர வேண்டுமென்றால் அதற்கு அரசியல்வாதிகள் எங்களை மட்டுமல்ல, எதிர்கால அதிகாரிகள் உங்களுடைய பங்களிப்பும் மிக மிக முக்கியம்.

செலவுகளுக்குப் பயந்தோ, ஏழ்மை நிலைமை காரணமாகவோ தமிழ்நாட்டு இளைஞர்கள் தங்களது ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் கனவுகளைத் தியாகம் செய்து விடக்கூடாது.

**மாணவர்கள் வெற்றியடைய வாழ்த்துகள்!**

அதைக் கருத்தில் கொண்டுதான் இந்தத் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி, நீங்கள் ஒவ்வொருவரும் வெற்றியடைய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். உங்களை இந்த அரசு வெறும் போட்டித் தேர்வாளராக மட்டும் பார்க்கவில்லை. நாளைய ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், வங்கிப் பணி அதிகாரிகளாக உங்களையெல்லாம் இந்த அரசு பார்க்கின்றது.

நீங்கள் ஒவ்வொருவரும் நாளை ஒரு நல்ல நிலைக்கு வர வேண்டும். அரசுப் பணிக்குச் செல்ல வேண்டும். இதனால், உங்கள் குடும்பமும் மகிழ்ச்சி அடையும். உங்களுடைய குடும்பங்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் உள்ள அத்தனை குடும்பங்களையும் தன் குடும்பமாக நினைக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மகிழ்ச்சி அடைவார் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்துறையின் அமைச்சராக மட்டுமின்றி, ஒரு சகோதரனாக நான் என்றும் உங்களுக்குத் துணை நிற்பேன். இந்த அரசும் உங்களுக்குத் துணை நிற்கும். உதவித்தொகை பெற்றுள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், மேயர் பிரியா, அண்ணா மேலாண்மைப் பணியாளர் கல்லூரியின் இயக்குநர் கூடுதல் தலைமைச் செயலாளர் விக்ரம் கபூர் ஐ.ஏ.எஸ், சிறப்புத்திட்ட செயலாக்கத் துறையினுடைய செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமத் ஐ.ஏ.எஸ், திறன் மேம்பாட்டுக் கழகத்தினுடைய நிர்வாக இயக்குநர் இன்னசன்ட் திவ்யா ஐ.ஏ.எஸ். உட்பட பலர் கலந்து கொண்டனர்.




சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று முன்தினம் (14.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் “நான் முதல்வன்” போட்டித் தேர்வுப் பிரிவின் கீழ் முதல் நிலை குடிமை பணிகளுக்கான தேர்வில் (UPSC) கலந்து கொள்ளும் 1.000 மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இதில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கூடுதல் தலைமைச் செயலாளர் /அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி இயக்குநர் விக்ரம் கபூர், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் தரேஷ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி இன்னசென்ட் திவ்யா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை, கலைவாணர் அரங்கில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ”நான் முதல்வன் போட்டித் தேர்வுப் பிரிவின் கீழ் முதல் நிலை குடிமை பணிகளுக்கான தேர்வில் (UPSC) கலந்து கொள்ளும் 1.000 மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இதில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கூடுதல் தலைமைச் செயலாளர் /அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி இயக்குநர் விக்ரம் கபூர், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் தரேஷ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி இன்னசென்ட் திவ்யா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## இரண்டாம் கட்டமாக – இஸ்ரேல் நாட்டில் சிக்கித் தவித்த

# 28 தமிழர்கள் பத்திரமாக தாயகம் திரும்பினர்!

### சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்!

சென்னை, அக்.16 -

இஸ்ரேல் பாலஸ்தீனம் நாடுகளுக்கு இடையேயான போர் தற்போது தீவிரமடைந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக் கினங்க தமிழ்நாடு அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட உதவி எண்கள் மூலம் அங்கு சிக்கித் தவித்த 128 தமிழர்களின் தகவல்கள் அறியப்பட்டது. இவர்களில் 13.10.2023 அன்று முதற் கட்டமாக புதுடெல்லி வந்த 21 தமிழர்கள் அவர்களது இல்லம் வரை, தமிழ்நாடு அரசின் சார்பில் அழைத்து வரப்பட்டனர்.

இந்நிலையில் இரண்டாம் கட்டமாக நேற்று முன்தினம் (14.10.2023) மதுரை, திண்டுக்கல், கரூர், தென்காசி, தர்மபுரி, திருப்பூர், திருவண்ணாமலை, திருச்சி, சென்னை, விழுப்புரம், திருப்பத்தூர், சேலம், கோயம்பத்தூர் முதலிய மாவட்டங்களைச் சேர்ந்த 28 தமிழர்கள் இஸ்ரேலில் இருந்து சிறப்பு விமா னத்தில் நேற்று காலை 06.00 மணிக்கு புதுடெல்லி வந்தடைந்தனர்.

புது டெல்லி விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் அவர்களை வரவேற்று அவர்களுக்கு காலை உணவு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசு செலவில் விமான பயண சீட்டுகளும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்களில் 16 தமிழர்கள் சென்னை விமான நிலையத்திற்கும், 12 தமிழர்கள் கோயம்பத்தூர் விமான நிலையத்திற்கும் வந்தடைந்தனர். மேலும் அரசின் தரப்பில் அவர்கள் சொந்த மாவட்டங்கள் செல்ல வாகனங்களும் ஏற்பாடு செய்யப்பட்டது.

சென்னை விமான நிலையத்திற்கு வந்தடைந்த 16 தமிழர்களை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே. எஸ். மஸ்தான் அவர்கள், அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் திருமதி. ஜெசிந்தா லாசரஸ் மற்றும் துறை அலுவலர்கள் வரவேற்று, அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

கோயம்பத்தூர் விமான நிலையம் வந்தடைந்த 12 தமிழர்களையும், கோயம்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வரவேற்று அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார்.

இதுவரை, இந்நேர்வில் இஸ்ரேலில் இருந்து 49 தமிழர்கள் ஆபரேஷன் அஜய் மற்றும் தமிழ்நாடு அரசின் சார்பிலும், 12 தமிழர்கள் தங்கள் சொந்த செலவிலும் தமிழ்நாடு வந்தடைந்துள்ளனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விக்கிரவாண்டி சூர்யா பொறியியல் கல்லூரியில் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில் மாபெரும் பேச்சுப்போட்டி மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வாழ்த்துரை வழங்கி துவக்கி வைத்தார். மேலும் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை, கேடயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் புகழ். செல்வகுமார் புகழேந்தி வரவேற்புரையாற்றினார். இதில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, ஸ்டாலின், செந்தில்குமார், ஆனந்தகுமார், பிரசாத், ரீகன் ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அம்மா திருமதி.விசாலாட்சி பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர் இரா.இலட்சுமணன், மாநில பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன், நடுவர்கள் கயத்தூர் ஆசிரியர் குமார கிருஷ்ணன், ஆசிரியர் சஞ்சீவிராயன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு. தங்கம், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி. என். முருகன், தயா இளந்திரையன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். பொறியாளர் அணி தலைவர் சுரேஷ் நன்றியுரையாற்றினார்.

# திராவிட மாடல் அரசு 39

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**







## உலக அரங்கில் ‘தமிழ்’ சாம்பியன்ஸ்!

சமீபத்தில் நடந்து முடிந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 20 வீரர்கள் 9 தங்கம், 11 வெள்ளி மற்றும் 8 வெண் கலம் என மொத்தம் 28 பதக்கங்களை வென்று பெருமை சேர்த்தனர். தமிழ்நாட்டு வரலாற்றில், ஆசிய அளவிலான இந்த விளையாட்டுப் போட்டி களில் இதற்கு முன்பு இவ்வளவு வீரர்கள் இத்தனை பதக்கங்களை வென்றிருப்பார்களா என்பது சந்தேகமே.

2022-இல் நம் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, முன் எப்போதும் இல்லாத அளவுக்கு விளையாட்டுத் துறைக்கும், விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், போட்டிகள் என அனைத்துக்கும் அதிக அளவில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

கவனம் செலுத்துவது என்பது வெளிப்படையான நிர்வாகம் மட்டுமல்ல. துறைக்குப் போதுமான அளவு நிதி ஆதாரத்தைப் பெருக்குவதும்தான். அதை நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசின் கீழ், மாண்புமிகு விளையாட்டுத்துறை அமைச்சர் திறம்பட மேற்கொண்டு வருவதன் விளைவுதான், தமிழ்நாட்டு வீரர்கள் பதிவு செய்திருக்கும் இந்த வெற்றி என்றால் மிகையில்லை.

இவர்களைப் போன்ற திறமை இருந்தும், போதுமான பயிற்சிகளோ, உபகரணங்களோ, ஊட்டச்சத்து உணவோ, தேசிய சர்வதேசிய போட்டிகளில் கலந்துகொள்வதற்கான பயணங்களுக்குப் போதிய அளவில் நிதி வசதி இல்லாமலோ தவிக்கும் விளையாட்டு வீரர்களுக்குக் கைகொடுக்க நம் ‘திராவிட மாடல் அரசு’ உருவாக்கியிருக்கிறது **‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’**.

### விளையாட்டுத் தலைநகர் இலக்கு

தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகராக மாற்ற வேண்டும் என்ற இலக்கை அடைய, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, மாநிலத்தில் அதி நவீன விளையாட்டு உள் கட்டமைப்பு மற்றும் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தவும், விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், விளையாட்டுச் சூழலை உருவாக்கிடவும், அரசுக்கும் பங்குதாரர்களுக்கும் இடையில் தடையற்ற ஒருங்கிணைப்பை அடைவதற்கும், பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து பெறக்கூடிய பலன்களைப் பயன்படுத்துவதற்கும், **‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’** என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை சிறப்பாக இயங்க நிதி ஆதாரம் என்பது மிக அவசியமான ஒன்றாகும். எனவே, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கிடும் வகையில் இந்த அறக்கட்டளை தொடங்கப்பட்டுள்ளது.

இந்த அறக்கட்டளையை 2023, மே 8 -ஆம் தேதி, சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். அப்போது இந்த அறக்கட்டளைக்கான இலச்சினை மற்றும் வலைதளத்தை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திர சிங் தோனி தொடங்கி வைத்தார்.

### வரி விலக்கு பெற்ற அமைப்பு

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் உருவாக்கம், உறுப்பினர்கள் மற்றும் இயக்குநர் குழுவின் செயல்பாடுகள் ஆகியவை தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அறக்கட்டளைக்கு, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்ட 7 பேர் அடங்கிய நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

> ➢ தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை தொடங்கப்பட்ட நாளில் இருந்து இப்போது வரை பெறப்பட்ட நிதி நன்கொடை - **18** கோடியே **89** இலட்சத்து **97** ஆயிரத்து **500** ரூபாய்.
>
> ➢ அறக்கட்டளை மூலம் இதுவரை விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி - **3** கோடியே **96** இலட்சத்து **48** ஆயிரத்து **649** ரூபாய்.
>
> ➢ அறக்கட்டளை மூலம் இதுவரை பயனடைந்த விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை **92**.
>
> ➢ அறக்கட்டளைக்கு இதுவரை பங்களிப்புச் செய்த நிறுவனங்களின் எண்ணிக்கை **60**.

மேலும், இந்த அறக்கட்டளையானது வருமான வரிச் சட்டம்-1961 இன் கீழ், பிரிவு 12-AA மற்றும் 80-G இன் கீழ் வரி விலக்குச் சான்று பெற்றுள்ளது. எனவே இந்த அறக்கட்டளைக்கு நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள், தனிநபர்கள் ஆகியோர் வருமான வரி தாக்கல் செய்யும்போது தாங்கள் அளித்த நன்கொடைகளுக்கு விலக்கு பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த அறக்கட்டளையின் நிர்வாக நடைமுறைகளைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு, தமிழ்நாடு அரசு முதற்கட்டமாக 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. தவிர, இந்த அறக்கட்டளையின் நிர்வாக நடைமுறைகளைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது சொந்த நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாயை வழங்கி வாழ்த்தினார்.

### உள்ளடக்கிய ஆதரவும் வெற்றிகளும்

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற தமிழ்நாட்டு வீரர்களைச் சிறப்பிக்கும் நிகழ்ச்சியில் பேசிய விளையாட்டுத்துறை அமைச்சர், “இந்த அறக்கட்டளையின் மூலம் பன்னாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர், வீராங்கனைகளுக்குப் பயணம், விசா செலவு, தங்குமிடம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுக்காக நிதி அளித்தும் வருகின்றோம். இதுவரை அந்த அறக்கட்டளை தொடங்கப்பட்டு ஐந்து மாதங்களில் 90 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.3 கோடியே 80 இலட்சம் அளவில் நிதி உதவி அளித்துள்ளோம்” என்றார். அதற்குப் பிறகு அவர் குறிப்பிட்டதுதான் மிக முக்கியமானது.

நாம் நிதி உதவி அளிக்கின்றோம். நிதி உதவி பெற்றுச் செல்லும் வீரர், வீராங்கனைகள் பதக்கங்களைப் பெற்று வந்து நம்முடைய தமிழ்நாட்டுக்கும், நம்முடைய இந்தியாவுக்கும் பெருமை சேர்க்கின்றார்கள். குறிப்பாக, மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளின் திறமையை நாம் பாராட்டியே ஆக வேண்டும்.

சமீபத்தில், ஜெர்மனியில் நடைபெற்ற ‘வேர்ல்டு டுவார்ஃப் கேம்’மில் பங்கேற்கச் சென்ற நம்முடைய வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் 8 பேருக்கு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து தலா ரூ.2 லட்சம் வீதம் எட்டு பேருக்கு வழங்கினோம். இதில் மகிழ்ச்சிக்குரிய செய்தி என்னவென்றால், அந்த வீரர்கள் அத்தனை பேரும் பதக்கத்துடன் திரும்பி வந்து நம்மைச் சந்தித்தார்கள்” என்று கூறினார்.

இவ்வாறு, மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அனைவரையும் உள்ளடக்கிச் செல்கிறது நம் **‘திராவிட மாடல் அரசு’** விளையாட்டுத் துறை. சமூக நீதி, இந்தித் திணிப்பு எதிர்ப்பு, கல்வி, சுகாதாரம், தொழில் வளர்ச்சி என தமிழ்நாடு முன்னேறிய மாநிலம் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. அந்த வரிசையில், இனி தமிழ்நாடு என்றால் **‘அது சாம்பியன்களின் பூமி’** என்று சொல்லப்படும் நாள் வெகுதொலைவில் இல்லை..!

**...சாதனை தொடரும்**

## கிரிக்கெட்டில் அரசியல் - வடக்கும் தெற்கும்!

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் நடைபெற்று வரும் நிலையில், அகமதாபாத்தில் நடந்த இந்தியா-பாகிஸ்தான் போட்டியின்போது ரசிகர்கள் செய்த செயல் அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் செயல் சமூக வலைதளங்களில் விமர்சிக்கப்பட்டு வரும் நிலையில், உமா பா. செ. என்பவரின் முகநூல் பதிவு கவனிக்க வைக்கிறது.

"இந்திய அணியின் கேப்டனாக முகமது அசாருதீன் இருந்தார். அப்போது பலமுறை பாகிஸ்தானுடன் தோற்றிருக்கிறது இந்திய அணி. ஆனால் ஒருபோதும் அதை வைத்து சச்சரவுகள் வந்தது இல்லை. ஏன் தோற்றோம் என்ற ஆற்றாமை அல்லது வியூகத்தில் எங்கே தோற்றோம், ஏன் சரியாக அடிக்கவில்லை, இப்படியான விவாதங்கள்தான் நடக்கும்.

ஒருபோதும், அசாருதீன் ஒரு முஸ்லிம் அதனால் விட்டுக்கொடுத்தார் என்ற பேச்சுகளை நாம் கேட்டதில்லை. போலவே உலகின் தலைசிறந்த பவுலர் வாசிம் அக்ரம் என்று சொல்லும் சுதந்திரம் இருந்தது. இனிமேல் அப்படியொரு சூழல் வருவதற்கு வாய்ப்பில்லை, அந்த நம்பிக்கை உடைந்து விட்டது.

1999 ஆம் ஆண்டு ஜனவரி 31, இந்தியா தோற்றுப்போன ஒரு மேட்ச்சில், சச்சின் சதமடித்தும் தோற்ற அந்த மேட்ச்சில், பாகிஸ்தான் வீரர்களுக்காக எழுந்து நின்று கைதட்டி ஆரவாரம் செய்தது "சென்னை".

பாகிஸ்தான் வீரர்கள் மைதானம் முழுவதும் சுத்தி ஓடிவந்து அந்த மகிழ்ச்சியை மரியாதையை ஆரவாரமாகப் பெற்றார்கள். அப்பொழுதும் கை தட்டி அவர்களை திக்குமுக்காட வைத்தது தமிழ்நாடு.

ஆயிரம் வான்கடே வரலாம். ஆயிரம் ஈடன் கார்டன் வரலாம். ஆனால் ஒரே ஒரு சென்னைக்கு அது ஈடாகாது. தமிழ்நாட்டின் தன்மை அத்தகையது. வடக்குக்கும், தெற்குக்குமான அந்த வித்தியாசம் இதுதான். தமிழ்நாடு எவரையும் தாங்கிப் பிடிக்கும். தாழக் கிடப்பாரை தற்காப்பதே தர்மம். அது தமிழர்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் தெரியும்" எனக் குறிப்பிட்டுள்ளார். விளையாட்டை விளையாட்டாக மட்டும் பார்த்தால் இந்த சர்ச்சை இருந்திருக்காது.

## ஃப்ளாஷ்பேக்





செல்வகுமார்

### கோபியில் பெரியார்!

1970-ஆம் ஆண்டு கோபிச்செட்டிபாளையத்துக்குப் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக தந்தை பெரியாரும், இலங்கையில் கழகம் வளர்க்கப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த வி.என்.ராஜூ ஆகியோரும் வருகை தந்தார்கள். அப்படியான சூழலில் தி.மு. கழகத்தில் தீவிரமாக இயங்கிய என் தாத்தா என்.எஸ். சுபண்ணன், அவர்கள் இருவரையும் கட்சி அலுவலகத்துக்கு அழைத்து உபசரித்தபோது, இந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளது.

**-செ.செல்வகுமார்,**
**கோபிச்செட்டிப்பாளையம்,**
**ஈரோடு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சுயமரியாதைத் திருமணச் சட்டம்!

**சுயமரியாதைத் திருமணங்களை சட்டப்பூர்வமாக்கிய இந்துத் திருமண சட்டம் பிரிவு- 7-A திருத்தச் சட்டம், அண்ணாவின் புரட்சியாகப் பார்க்கப்பட்டது. அதுவரை நடைபெற்ற சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்பூர்வத் தகுதி பெற்றதோடு மட்டுமல்லாமல், பார்ப்பன புரோகிதர்கள் மற்றும் சடங்குகள் எதுவும் இல்லாமல் சுயமரியாதைத் திருமணங்கள் பெருமளவில் நடைபெறவும் இச்சட்டம் வழிவகுத்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 271




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.